முரசொலி

ஆசிரியர்

வார இதழ்

மு. கருணாநிதி

முரசு 3 | 27-7-56 | வெள்ளி | ஒலி 16

பூகம்பம்!

பிரிட்டிஷ் ராணியாருடன் விருந்துண்டு, அயர்லந்து நாட்டிலே ஓய்வு என்ற பெயரிலே உல்லாசப் பொழுதுபோக்கி, ஜெர்மனியிலே அடினாயிரோடு அளவளாவி, பிரியோனித் தீவில் டிட்டோ, நாசருடன் உரையாடி, சென்ற கிழமை 'வீடு' திரும்பினார் அலகாபாத் பண்டிதர்.

நேரு விமான நிலையத்தில் காலெடுத்து வைத்த நேரம், கட்ச் பகுதிலே பயங்கரமான பூகம்பம்; அதற்குப் பலர் சாவு கொடுக்கப்பட்டிருக்கின்றனர்!

பூகம்பம் அங்கு மட்டுமல்ல; காங்கிரஸ் கட்சியிலும், அவரது மந்திரி சபையிலும், பாராளுமன்றத்திலும் மற்றும் நாட்டின் பல மூலை முடுக்குகளிலும் ஏற்பட்டிருக்கிறது.

மைசூர் முதலமைச்சர் அனுமந்தையாவின் ராஜினாமா விவகாரம், அதை உள்ளடக்கியுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம்—புகைந்தபடி இருக்கிறது.

நிதி அமைச்சர் தேஷ்முக்கின் ராஜினாமாவோ ஒரு மாபெரும் நில நடுக்கத்தை காங்கிரஸ் வட்டாரத்திலே ஏற்படுத்தியிருக்கிறது.

மேலும் ஒரு மகத்தான பூகம்பத்துக்கான அறிகுறிகள் பாராளுமன்றத்திலே தோன்றியிருக்கின்றன.

ஆமாம்; மாநிலப் புது அமைப்புச் சட்டம் விவாதத்துக்கு வரப் போகிறது!

இதைத் தவிர நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கும் விலை உயர்வின் விளைவு—பூகம்பததை விட பயங்கரமானது!

கட்டாக் பூகம்பத்திற்கு நேரு அனுதாபம் தெரிவித்துவிட்டார்.

ஆனால் பம்பாயிலே, பீகாரிலே, நாட்டின் இதர பகுதிகளிலே எல்லையைக் குறித்து எழுந்திருக்கும் மற்ற பூகம்பங்களுக்கு அவர் என்ன பதில் சொல்லப் போகிறார்?

அமுக்கப்பட்டவர்கள் கிளப்பிடும் பூகம்பம் ஆளும் வர்க்கத்தையே ஒழித்துவிடும்.

முப்பத்தி மூன்று நாட்கள் நாட்டு நிர்வாகத்தை மறந்து உலகம் சுற்றி வந்திருக்கும் பண்டிதர் இதை உணர்ந்து கொள்ளட்டும்!

○

இலக்கியத்தில் நாம்

'அ! த்தான்!'

சித்திரம் செங்கனி வாய் பிளந்தது. 'உலையே!'-சிலைபோல் நின்ற அவன் அவள் பக்கம் விழிக் கோணம் திருப்பினுன். ஓர் விழிப் பார்வையால் ஒண்டொடியாள் வேண்டினுள், விரைவில் திரும்பி விடுங்கள் என்று!

விழி இமைப்பதற்குள் வெற்றி மழை பொழிவேன். 'வென்றேன் நான்' என்ற செய்தி நீ கேட்பதற்கு முன், கோடி நிலவின குளிர் வடிவே! பகைக் குலத்தைக் கூறுபோட்ட களிப்போடு, உன் மடியில் வந்து சாய்வேன். சிலையே! எங்கே சிரித்துக் காட்டு!' களம் நோக்கி கிளம்பி விட்ட மாவீரன், அம்மான் விழியாளிடம் இப்படி மன்ருடினுன்!

'சரியத்தான்' திரும்பி வரும்போது என்ன வாங்கி வருகிறீர்கள்!'

'முல்லைச்சரம் கூடை, முத்து இரண்டு படி!'

'உஹூம்'

'கொம்புத்தேன் ... குடம் குடமாய்!'

'வேண்டாம்'

'தோற்றேடும் மன்னனின் மணி முடி!'

'சீ! சீ! அவைகள் என் காலடி!'

'வேறென்ன வேண்டும்!'

'மாணிக்கப் பாலாடை, மரகதத் தொட்டில் மறந்து விட மாட்டீர்களே!'

களம் நோக்கிப் பாய்ந்தவனை தொட்டில் ஒன்று கேட்டு, கட்டிலறை நினைவுச் சின்னம் ஒன்று தன் கனகமணி வயிற்றில் வைர நிலா போல் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பால் உணர்த்தி நின்ருள், நாணத்தால் அவள் கன்னக் கதுப்புகளில் அந்தி வானத்தின் ரத்தச் சிவப்பு சூழ்ந்து கொண்டது. தித்திக்கும் பழ உதட்டில் முத்து நகை புரண்டது!

செய்தி கேட்டதும், போர்க் கோலம் பூண்டு நின்ற ஆணழகன் உயிரெல்லாம் உடம்பெல்லாம் இன்ப மழையால் நனைந்து நின்ருன.

தன் வீரப் பெருங் குடிக்கு வாரிசு ஒன்று உதிக்கப்போகிறது என்ற செய்தி அவள் தோள்களில் புது முறுக்கேற்றி விட்டது!

வாள் முனையை ஒரு முறை தடவிக் கொண்டான, வீரச் சொல் உதிர்க்கும் அவன் உதடுகளுக்கு வனப்புகாட்டி நின்ற அரும்பு மீசையில் துடிப்பும், துரோகிகளைத் தூளாக்கிடும் படபடப்பும் கூத்தாடிற்று.

சேர்த்தெடுத்த அழகின் சிலை வடிவு போல் நின்ற அக்கோலத் திரு மேனியாள், கொவ்வை இதழ் கூட்டி நின்ருள்—

குறிப்பறிந்த தலைவனும், குழைந்து நின்ற அக்கோதையின் கன்னங்களில் இதழ் ரேகை பதித்தான், பார்த்த விழி பிரிக்காமல், கோர்த்த கரம் எடுக்காமல்!

போர்ச் செய்தி சுமந்து அதிர்ந்தது அப்பொல்லாத முரசு!

இனியும் இங்கு நில்லாதீர் அத்தான.

'முரசு ஒலிக்கிறது—முத்து நகையாளோடு முயங்கிக் கிடக்கிருன். உணர்வில்லாக் காமச் சிறு புழு' எனறு ஊர் தங்களை ஏச ஆரம்பிக்கும்;

ஓடுங்கள்; ஒழியும் வரை பகையைச் சாடுங்கள்; பாண்டிய வம்சத்துக்குக் கீர்த்தி தேடுங்கள்' என்ருள் அத்தேமலளந்த சிலை மேனியாள்.

தொடர்ந்து பல நாட்கள் போர் நடந்து கொண்டிருந்தது. வெற்றி எப்படைககு; என்ற முடிவைக் கவனிக்கவும் முடியாத நிலையில் இரு தரத்து வீரர்களும் மதங் கொண்ட யானைகளைப் போல மோதிப் பொருதனர்.

பனிக் கடல் மூழ்க பரிதி எழும் போது கீழ் வானத்தில் காணப்படுமே செந்நிறம், அந்நிறம பெற்று நின்றது அப்போர் களம். வடுக்கள் பல பெற்ருன்; தொடுக்கும் கணைக்கு துணைக் கணை, புயல் வேகத்தில் பொழிந்தான்! வேல் கண்டு இமைக்காத அவன் விழிகளில் வெந்தணல் வீசிற்று!

மாற்ருன் படைகளை மலைமலையாக அனுப்பினுன் சாவூருக்கு!

பிணக் குன்றில் நீந்தி வெற்றி முரசறைந்தான்; புண்பட்ட இடமெல்லாம் பவழத்து கண் போல ரத்த விடர்வை அரும்பி நின்றது. அதைத் துடைத்திடவும் நினைவு கொண்டானில்லை!

சாட்டை கொண்டு தாக்கு; காற்றினும் கடிது செல்லட்டும் புரவிகள். என்று பாகனுக்கு உத்தரவிட்டான்.

அவன் மனேவேகத்தோடு: புரவிகள் போட்டியிட்டன!

தேர் சக்கரங்கள் புழுதிப் புகை கிளம்பியபடி உருண்டு கொண்டிருந்தன; அவன் நினைவுகளோ அதைவிட வேகமாக உருண்டு கொண்டிருந்தன.

'பாகனே! என் இல்வளர் முல்லை; பிரிவுத் துயர் தாங்காமல் என்ன ஆனளோ? இந்நேரம் அவள் பங்கஜ வதனத்தில் பசலை நிறம் படர்ந்து விட்டதோ என்னவோ? பாவி நான் அறியேன்! நண்பனே! வரிக்குயில் பாடும்; மாமயில் ஆடும்; பேடையும் சேவலும் புது சுகம் காட்டும்; அன்னத்தின் அசைவிலே ஆனந்தத்தையும்; மயிலின் ஆட்டத்திலே இன்பத்தையும் பேடையின் நடையிலே பூரிப்பும் கண்டு கொண்டிருந்தவள்; தனிமைத் தனல் வாட்டும் இந்நிலையில்; என்னை எண்ணி எண்ணி வருந்துவாள்; வான் மழைத் தாரையென கண்ணீர் வடித்து நிற்பாள்!

அலைமோதும் இரவெல்லாம் அனல் பட்ட புழுவெனத் துடிப்பாள்; துயர மேலீட்டால் என்னைச் சபிப்பாள்; ஓட்டு பாகனே! தேரை விரைவாக ஓட்டு! தோழனே! தான் வளர்த்து வரும் கிள்ளையோடு கிளிமொழி பேசுவாள்! 'கிளியே! என்று வருவார் என் ஏந்தல்! இன்று வருவாரா? நின்று வருவாரா? என்று தான் வருவார் என் இதய ராஜா! சொல்! செல்லக் கிளியே உன் செவ்வாய் திறந்து ஒரே வார்த்தை சொல்! என் பர்த்தாவை நான் எனறு பார்ப்பேன்' இப்படி மெல்ல மெல்ல பேசுவாள்;

ஆமாம்; வீட்டிலுள்ள மற்றவர்கள் கேட்க முடியாதபடி அவ்வளவு மெதுவாக தன செல்லக் கிளியோடு மழலை பேசி உருகுவாள்!

ஏன் தெரியுமா?

தாயகத்துக்குக் கடமையாற்ற பிரிந்து சென்ற தலைவனுக்காக வருந்தி நிற்பது தமிழ் பெண்களுக் கழகல்ல; நாட்டுக்குத் தேவையெனில் வீட்டுக்கொரு வீரனை அனுப்பும்; வைர நெஞ்சத் தாய்க் குலத்திற்கு; அது ஏற்ற செயலுமாகாது; எனவே தான் வீட்டிலுள்ள மற்றவர்கள்; களம் சென்றுள்ள காதலனை நினைத்து இவள் கலங்குவதையும்; கொஞ்சும் கிள்ளையை முன கையில் ஏந்தி 'என்று வருவார்!' எனறு ஏங்கிக் கிடப்பதையும் பார்த்து விட்டால்.

'நாட்டுப் பற்றில்லாத நங்கையடி இவள்; வெரும் சோற்றுத் துருத்தி'

'ஏடி தமிழ் ஜாதிப் பெண்ணு நீ! சொத்தையல்லடி உன் கணவன்; கொத்த வரும் பகை சாய்க்கத்தான; சென்றுள்ளான; கடமையாற்ற போயிருக்கிருன்; கோழை ஜாதிப் பெண போல குமுறி நிற்கிருயே!' என்று கேட்டுவிட்டால் என்ன செய்வது என்ற அச்சத்தோடுதான், அச்சடித்த என் தமிழ்ப பதுமை செவியோடு செவி வைத்து தன் செல்லக் கிளியோடு முறையிட்டு நிற்பாள், தாவிச்செல்; இனியும் அவளை தவிக்கவிட முடியாது! என நிலையறிந்த பாகனே; வல்லமை மிக்க தமிழ் மகனே! ஓட்டு; தேரை விரைவாக ஓட்டு! என்று பாகனுக்கு வேண்டுகோள் விடுத்தான்.

'மாணிக்கத் தொட்டிலும், மரகதப் பாலாடையும் எங்கே என்று அவள் கேட்டால் என்ன செய்வது எனறு அவன் நினைத்து முடிப்பதற்குள்; தேர் அவன் இல்லத்துத் தலைவாயிலில் வந்து நின்றது. கோடி நிலவின் குளிர் வடிக்கும் அம்முகத்தழகி; வாய் நிறைய வரவு கூறி நின்றனள்; வைத்த விழி எடுக்காமல் அவன் வண்ணச் சிலை மேனியை, வயிரத் தோள்களை; ரத்த வடுக்களை; விழியால் மேய்ந்தாள்; இதழோடு இதழ் இணைத்து ஓய்ந்தாள்! அந்த அகத்துறை காதல் ஓவியத்தின் சொற் சித்திரம் இதோ.

"செந்தார்ப்பைங்கிளி முன்கை
ஏந்தி
இன்றுவரல் உரைமோ
சென்றி சினேர் திறந்து என
இல்லவர் அறிதல் அஞ்சி
மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை
மாண்நலம் பெறவே

[அக நானூறு]

(வீ)

இணையற்ற நாடகம்

ஒப்பற்ற நூல் வடிவில்!

*

விலை ரூபாய் 1—8—0

*

முத்துவேல் பதிப்பகம்
77, மதுரை ரோடு,
— திருச்சி. —

சென்னை 27--7--56 வெள்ளி

மனச்சாட்சியும் - மந்திரிகளும் !

★ ★ ★

தாயகத்தை அன்னியன் ஒருவனுக்கு அடிமைச் சாசனம் செய்து வைப்போரை வருங்காலம் மன்னிப்பதே இல்லை.

நிலையற்ற பதவிகளுக்காகவும், தற்காலிகச் சலுகைகளுக்காகவும். பிறந்த மண்ணுக்குத் துரோகம் செய்பவர்கள் பின்னர் காலம் மாறும் போது சூறைக்காற்றில் பஞ்சுபோல் இருக்குமிடம் தெரியாமல் போயிருக்கிறார்கள்.

இந்த உண்மையை உணர்ந்துகொண்டு, அற்பப் பதவி சுகத்திற்காக மொழியையும் இனத்தையும் குழிதோண்டிப் புதைக்க எண்ணும் குள்ளநரி மனத்தினருக்கு விடை கொடுத்துவிட்டு, நிதி அமைச்சர் பதவிக்கு முழுக்குப் போட்டுவிட்டார், தேஷ்முக் !

வர்த்தக அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியாரைப் போலவே பல முறை அறிவிப்பு விடுத்தார், நான் விலகப்போகிறேன்; விலகப் போகிறேனென்று !

ஆனால் கிருஷ்ணமாச்சாரியாரோ தேனில் ஈயாக பதவியை மொய்த்துக்கிடக்கிறார். ஆனால் தேஷ்முக்கின் உடலில் ஓடும் மராட்டிய இரத்தம் அவரை மார்தட்டிப் பேச வைத்துவிட்டது.

முன்பு சென்னை வந்தபோது கூறினார்:

நான் ராஜிநாமா செய்வது என் மனச் சாட்சியைப் பொறுத்த விஷயம். மராட்டியருக்கு நீதி வழங்கப்படவில்லை. என் மனச்சாட்சி அதை சரியென்று நினைக்கவில்லை, எனவே விலகுகிறேன்.

மந்திரிகளென்றால் அவர்களுக்கு மனச்சாட்சி இருக்கக் கூடாதா ?

— இந்தப் பொருள்படும்படி பத்திரிகை நிருபர்களிடம் பேசினார், தேஷ்முக் !

உண்மைக்கு மதிப்பு தரும் மனிதரென்ற காரணத்தால் அவருக்கு மனச்சாட்சி இருந்தது.

அவர் மந்திரியென்ற காரணத்தால் அந்த மனச்சாட்சி ஊமையாகி விடவில்லை. உம் சோதரர்கள் சோதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார் களே; உன் பரம்பரை பம்பரம்போல் சுழற்றப்படுகிறதே! நீ என்ன செய்யப் போகிறாய்? அதட்டிக் கேட்டது மனச்சாட்சி!

சிவாஜி பிறந்த மண்ணுக்கு உரிமையாளனே! உன்னினத்தின் பெருமையும், புகழும் மண்ணோடு கலப்பதைத்தான் உன் கண்கள் காணவேண்டுமா? மராட்டிய மண்டலம் வஞ்சிக்கப்பட்டது என்ற செய்திதான் உன்னை மகிழ்விக்கச் செய்கிறதா? அய்யோ பாவமே! உணர்ச்சியற்ற மரக் கட்டைகளுக்கு உங்கள் தாய் எப்போதப்பா உயி ரூட்டினாள்? இந்த அழுகுரல் அவர் காதுகளிலே ஒலித்தது !

அதன் விளைவுதான் தேஷ்முக்கின் ராஜினாமா ?

மனச்சாட்சி உள்ள பிறவிகள் காங்கிரஸ் கட்சி அமைத்துள்ள மந்திரி சபையிலும் இருக்கின்றன என்று சொல்வதைப் போல இந்த அறிவிப்பு வந்திருக்கிறது.

ஆனால்; மனச்சாட்சியுள்ள மந்திரிகள் டில்லியில் மட்டும்தானா இருக்கிறார்கள்? இங்கும் உண்டே என்று பெருமையுடன் கூறிக் கொள்ள நாம் முடியாதவர்களாயிருக்கிறோம்.

'அழகிய பூந்தோட்டம் இருக்கிறது; அதிலே மலர்களிருக்கின்றன; அந்த மலர்களில்தான் மணம் இல்லை என்பதைப் போல, இங்குள்ளவர்களோ கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கிய கதையை நினைவுறுத்துவதைப் போல், மனச்சாட்சியை ஏக பாரத வட்டி வேந்தர்களிடத்திலே அடகு வைத்துவிட்டு அமைச்சுப் பதவியை வாங்கி யிருக்கின்றனர்.

தமிழகம் உலகறிந்ததில்லை யென்கிறார் ஒரு அமைச்சர்; இலக்கியத்தில் அது வரவில்லையே - பின் எப்படிச் சூட்டுவது அப்பெயரை— என அங்கலாய்த்துக் கொள்கிறார் இன்னொருவர்.

அவர்களுக்குத் தெரியாதா, தமிழகத்தின் தொன்மை பற்றி! இலக்கியம் தொட்டதில்லையாயினும் நாம் மேடைக்கு மேடை, எழுத்துக்கு எழுத்து எடுத்துக் காட்டும் ஆதாரங்கள் அவர்களுக்குப் புரிந்திருக்க முடியாதா?

நிச்சயமாகப் புரிந்திருக்கும். தெளிவற்ற நெஞ்சினரும் தெளிவு பெறத்தக்க பான்மைமிக்கதுதான் நமது பேச்சும், எழுத்தும் !

தெரிந்தும் தெரியாதது போல் நடிக்கிறார்கள். உண்மைக்குச் சீட்டுக் கிழித்து, மடமைக்கு மகுடம் புனைவிக்கிறார்கள். டெல்லி மூலவர்களின் கருணைக்காக, அவர் கொடுக்கின்ற கைக்கூலிப் பொருளுக்காக !

வடக்கெல்லைப் பிரதேசங்கள் ஆந்திரத்துடன் இணைக்கப்பட்டு விட்டன.

தெலுங்குச் சீமையின் முதல்வர் கோபால் ரெட்டியாரோ கைவிரித்து விட்டார்.

வடக்கோ இதைப்பார்த்து மௌனம் சாதித்தபடி இருக்கிறது.

—காமராசரோ மனச்சாட்சியற்ற மனித பிம்பமாய் இன்னும் பதவி நாற்காலியில் ஒட்டிக் கொண்டுதான் இருக்கிறார் !

பம்பாய் கிடைக்கவில்லையென்கிற ஒரு காரணத்துக்காக தேஷ்முக் பதவியை உதறியெறிந்தார்.

தெற்கெல்லையிலே தமிழனின் உடமையாம் தேவிகுளம்-பீர்மேடு பிராந்தியங்கள் பறிபோன பின்பும் வெட்கம் மானம் சிறிதுமின்றி சிரித்துக்கொண்டே பதவியிலிருக்கிறார், காமராசர் !

அதுமட்டுமல்ல; தென்னாடும், வடநாடும் இணைவதற்கான காரணங்களுக்கும் விளக்கம் கொடுத்துவருகிறார்.

நெல்லை ம வட்டத்திலேயுள்ள ஒரு சிற்றூரில் பேசும்போது அவர் குறிப்பிட்டிருக்கிறார் :

"கன்னியா குமரியிலிருந்து காசிவரை ரஸ்தா மூலம் இணைக்கப்படுமானால் அது ஒரு பெரிய சாதனையாக இருக்கும் !"

இலங்கைக்கும், இராமேஸ்வரத்திற்கும் பாலம் அமைத்தார்களே அதைப்போல வடநாட்டுக்கு நேரடிப்பாதை அமைக்கப் போகிறாராம் காமராசர் !

நீண்டபாதை; அதிலே பொதி பொதியாகப் பொன்னும் பொருளும் பொதிகையைவிட்டு டில்லிக்கு !

—இதைக் கண்டு களிக்க வேண்டுமாம் காமராசர் !

சுற்றி வளைந்து செல்லும் பாதைகளின் வழியாக சுரண்டல் பொருளைக் கொண்டு செல்கிறீர்களே; இதோ நேரான பாதையை அமைத்துத் தருகிறேன்—என்று கங்காணி நிலையிலேயிருந்து டெல்லி எஜமானனுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்திருக்கிறார் சென்னை முதலமைச்சர் !

நேரான பாதையைவைத்துத்தான் உலகத்தின் பல நாடுகள் ஏகாதிபத்ய வலையை விரித்திருக்கின்றன.

ஜெர்மன் சக்கரவர்த்தி இரண்டாவது வில்லியம் இந்து மகா சமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்துவான் வேண்டி பேர்லினிலிருந்து பாக்தாத் நகர்வரை இருப்புப்பாதை யொன்று அமைத்திடத் திட்டமிட்டான்.

ஆசியாவுக்கு வலைவிரிக்க இந்த இருப்புப்பாதை ஒரு பலமான கருவி! ஆனால் இந்தத் திட்டம் அமுலானால் தங்களுடைய சந்தை பிடிக்கும் ஆசை தகர்ந்து விடுமென்று தெரிந்து கொண்ட பிரிட்டீசார் அந்தத் திட்டத்தை முளையிலேயே கிள்ளியெறிந்து விட்டார்கள் !

அதே முறையைப் பின்பற்றி வடக்கையும், தெற்கையும் ஒரே பாதையின் மூலம் இணைத்து இங்கு சுரண்டப்பட்ட பொருள்களை ஏற்றுமதி செய்வதற்குச் சுலபமான வழி சொல்கிறார், டெல்லி தரும் பிச்சைக்குப் பாத்திர மேந்தி நிற்கும் பச்சைத் தமிழர் !

பாவம்; மனச் சாட்சியில்லாத மந்திரி—தாயகத்தைப் பற்றிய உணர்ச்சியேதுமில்லாத மரக்கட்டை! அவருக்காகப் பரிதாபப் படுவோம் !

❋ ✶ ❋

சைப்ரசிலே- கட்டபொம்மன்கள்!

● மகன் தாயகத்தின் மானம் காக்க தூக்கிலே தொங்கிவிட்டான்-என்ற செய்தி கேட்டு, களித்தும் — கலங்கியும் திரும்புகிருள், 'கரோலி'சின் கிழத்தாய்!

● படுகொலையை அனுமதிப்பதில் பண்டார நாயகாவின் அண்ணன் ......

● மனித உயிர்களைச் சுட்டுப் பொசுக்குவதில் ஆச்சாரியாருக்கு ஆசான் ......

—இருக்கிருர்; இங்கல்ல— சைப்ரசில்!

"எங்கள் நாடு, தாயகமாம் கிரேக்கத்துடன் இணையவேண்டும். அதற்கு ஆவன செய்வீர்!"—என்று முழங்கிஞர்கள்!

தாயிடமிருந்து பிரித்து வைக்கப்படும் சேய், பின்னர் பேயெனக் கூச்சலிட்டு உம்மை அடிபட்ட நாயென ஓடச் செய்யுமென—எச்சரிக்கை விடுத்தனர், சைப்ரஸ் வாசிகள்! கேட்கவில்லை, ஆங்கில ஏகாதிபத்யம்; இப்போது அங்கிருந்து கேட்கிறது சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தையே ஆட்டிப் படைக்கும் அதிர் வேட்டுகள்!

சைப்ரஸ்—கேந்திர மையத்திலிருக்கிறது! மத்திய தரைக் கடலில் அது இரண்டாவது பெரிய தீவு.

எகிப்து; இஸ்ரேல்; லெபனுன்; துருக்கி-இவ்வளவு நாடுகளுக்கும் அருகாமையிலிருக்கிறது, அது!

சூயஸ் கால்வாயிலிருந்து வெள்ளைத் துருப்புகளை நாசர் அடித்துத் துரத்தியதும் அந்தப் பிராந்தியத்திலே இன்னெரு இராணுவ முகாம் சைப்ரசாகத்தான் இருக்க வேண்டுமென்ற நம்பிக்கை வலுத்துவிட்டது. எனவே தான் சைப்ரசை கிரேக்கத்துடன் இணையவிட மறுக்கிருர்கள், ஆங்கிலேயர்கள்!

ஜெபமாலை உருட்டிய பாதிரியார் மகாரியசை சேசெல்லஸ் தீவுகளுக்கு நாடு கடத்திஞர்கள்! தலைவரே போய்விட்டார்; இனி ஏது போராட்டம் என்று இறுமாந்து கிடந்தார்கள்! பாவம்; அவருக்குப் பின்னணியில் ஆயிரக்கணக்கானவர் அணிவகுத்து நிற்பதை மறந்துவிட்டார்கள்.

பாதிரியார் இருக்கும்போதாவது அமைதி வழியிற் சென்று இலட்சிய புரியை அடையலாமா—என நினைத்தார்கள். இப்போதோ ஆயுதமேந்தி விட்டார்கள்.

உயிர் எமக்கு வெல்லமல்ல என்று நினைத்து விட்டோர், ஆதிபத்ய வாதிகளை வெல்லாமல் விடமாட்டோம்—எனப் போர் முரசு கொட்டிப் புறப்பட்டு விட்டார்கள்!

● 'சாவு எனக்குச் சர்க்கரைப் பாகு' என்று சொல்லி, ஆங்கிலப் போலீசார் இருவர் புடைசூழ. தூக்குமேடை நோக்கி வேகநடை போடுகிருன், மைக்கேல் கரோலிஸ்!

காதலியருக்குக் கடைசி முத்தம்! பெற்ற தாய்க்குக் கடைசி மரியாதை! — இவைகளைக் கொடுத்துவிட்டு, உற்ற குழந்தையிடமிருந்து ஒரு புன் சிரிப்பு; ஒரு ஆலிங்கனம்—இவைகளை வாங்கிக் கொண்டு அன்னையின் விலங்கொடிக்க சம்மட்டியேந்திக் கிளம்பிவிட்டார்கள்!

சாவு எமக்குச் சர்க்கரைப் பாகு; துப்பாக்கி ரவை எமக்கு அமுது தரும் சுவை; தடியடி எமக்குத் திராட்சைக் கொடி— முழக்குகிறது அந்தப் பட்டாளம்!

தியாகம் அவர்களது மூச்சு; தொண்டு அவர்களது பேச்சு!

வீடு, வாசல், மாடு, மனை, மக்கள், சுற்றம் — இவைகளை மறந்தே அவர்கள் பல நாட்களாகி விட்டன!

'ஏனப்பா; உனது தாய் சீக்காய் கிடக்கிருளே—என்ருல், 'இதைவிட என் தாய் நாடே மரணப் படுக்கையில் கிடக்கிறதே'—என்று ஏளனமாகப் பதில் சொல்கிருர்கள், விடுதலையொன்றையே விண்ணிலும், மண்ணிலும் உயர்ந்த பொருளென்று நினைத்துவிட்ட புலிக் குட்டிகள்!

அதன் விளைவுதான் பயங்கர வாதிகளின் எழுச்சி! அதன் தொடர்ச்சிதான் சைப்ரஸ் முழுவதும் பலாத்காரத்தின் பிரதி பிம்பம்!

ஆங்கிலேயர்களா? நம்மை வாழவிடாத வன்னெஞ்சர்களா? குத்துங்கள்; வெட்டுங்கள்; கொலை செய்யுங்கள்— கூக்குரல் கிளம்புகிறது இப்படி!

இரோடட்டஸ் பௌலிஸ் என்னும் போலிஸ்காரரை (படம்—) **மைக்கேல் கரோலிஸ்** என்னும் விடுதலை வீரன் (படம்—) கொலை செய்துவிட்டானும்!

பசியால் அலறிக் கொண்டிருக்கிறது கன்று; பாலூட்டி, அது வயிறு வளர்ப்பதை விரும்பாத பேராசைக்காரனொருவன் பசுவிடமிருந்து அதைப் பிரித்து வைத்து வேடிக்கைப் பார்க்கிருன்!

அம்மா; அம்மா — என்று அலறுகிறது, அந்தக் கன்று!

'ஒரு துளியாவது தாய்ப்பால் சுவைத்திட என்னை அவிழ்த்து விடமாட்டாயா, அற்பனே!'—என்பதைப் போல தயவுடனும், கருணையை எதிர்பார்க்கும் நோக்குடனும் அந்தக் கன்று அந்தப் பேராசைப் பேர்வழியைப் பார்க்கிறது.

அவனே புல் நீட்டுகிருன்! காய்ந்துபோன வைக்கோலைத் தருகிருன், அந்தத் தாய்ப் பாசமறியாத நறுதலை!

அப்போது கன்று சும்மாவாயிருக்கும்? கொம்பு இல்லாவிட்டாலும் தலையால் முட்டித் தள்ளுவதற்குத்தானே முயற்சி செய்யும்!

அதைப் போலத்தான்; தாய் நிலையிலேயிருக்கும் கிரேக்கத்துடன் இணைய வேண்டுமென்கிறவன் கரோலிஸ்!

முடியாது என்று இறுமாப்போடு பதில் சொன்ஞன், ஆங்கிலேயன்!

உவமையிலே கன்று முட்டித் தள்ளுகிறது. ஆனல் சைப்ரசிலோ கரோலிஸ் மிருகமல்ல; அவனும் மனிதன்.

ஆகவே கொலை செய்துவிட்டான் ஒரு ஆங்கிலேயப் போலிஸ்காரனை!

கருணைப் பார்வையை வீசி; கண்கள் கூறும் ஊமைப் பாஷையால் பேசி; பின் வாய்

★ தொடர்ச்சி 4ம் பக்கம்

[படம்—1] மைக்கேல் கரோலிசால் கொல்லப்பட்ட பிரிட்டிஷ் போலீஸ் காரன், இரோடட்டஸ் பௌலிஸ்!
[படம் 2, 3] கரோலிஸ் 'தூக்க'ப்பட்டவுடன், பயங்கரவாதிகளால் பழிவாங்கப்பட்ட இரு பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள்—கார்டன் ஹில், ரோன்னி ஹில்டன்!

கடவுளின் பிறப்பும்-இறப்பும்

பி.சி.கணேசன்.
பி.எஸ்ஸி;பி.டி.

அந்தச் சிறுவர்கள் அனைவரும், திருவிழா பார்த்து விட்டுத் திரும்பியவர்கள். திருவிழாவின் நினைவு, இன்னும் அவர்கள் நெஞ்சை விட்டு நீங்கவில்லை. எதைப் பார்க்கிறார்களோ அதை அப்படியே செய்து பார்த்து மகிழும் குணம் படைத்தவர்கள்தானே குழந்தைகள்! ஆகவே, தங்களுடைய விளையாட்டிலும் ஒரு திருவிழா நடத்த வேண்டுமென்ற ஆசை அவர்களுக்குத் தோன்றியது. வெண்கலச் சிலை விமரிசையாக ஊர்வலம் வந்ததைக் கண்டிருக்கிறார்கள். திருவிழா நடத்த அவர்களுக்கும் ஒரு சிலை வேண்டும்! அது வெண்கலமாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் என்ன? வெறுங் கல்லாகவும் இருக்கலாமல்லவா? சிறுவர்கள் அனைவரும் காடு மேடெல்லாம் சுற்றி ஒரு கல்லைத் தேடி எடுத்தனர். நல்ல, பெரிய, வழவழப்பான கூழாங்கல்! ஆற்று மணலிலே கிடந்தது. அதை ஆற்று நீரில் நீராட்டித் தூய்மையாக்கினர். கந்தல் துணியெல்லாம் பொறுக்கி ஆடை உடுத்தினர். சாம்பலும், சந்தனமும் (இதை ஒரு சிறுவன் வீட்டிலிருந்து திருடிக் கொண்டு வந்தான்) பூசி, குங்குமப் பொட்டிட்டனர். கல்லை ஊர்வலமாகச் சுமந்து சென்று மரத்தடியில் நட்டனர். மல்லிகையோ அன்றி முல்லையோ மாலையாகவில்லை. எருக்கம் பூவிலிருந்து, அரளிப் பூ வரை, கிடைத்ததையெல்லாம் மாலையாக்கினர். விக்ரகம் 'பிரதிஷ்டை' ஆனது—கல் கடவுளானார்!

குழந்தைகளின் ஆர்வம் சில தினங்கள் தான் இருந்தது. அதற்குப் பிறகு 'கடவுளை'க் கவனிக்க நாதியில்லை. கேட்பாரற்று, பார்ப்பாரற்று, பரிதாபமான நிலையை அடைந்தார். இப்படியாக பல தினங்கள் கழிந்தன.

ஒரு நாள் நண்பகல். வழிப்போக்கன் ஒருவன் அவ்வழியே வந்தான். ஒட்டிப்போன வயிறும், எண்ணெயே காணாத பரட்டைத் தலையும். பஞ்சடைந்த கண்களும் அவன் வாழ வகையற்ற வர்க்கத்தைச் சேர்ந்தவன் என்று அறிமுகப்படுத்தின. சோம்பேறியாக வாழ்க்கையைக் கழிக்க வேண்டும் என்ற 'பிச்சைக்கார வேதாந்தி' அல்ல அவன். உடல் வலிவு கொண்டு உழைக்க வேண்டும், அதனால் ஊதியம் பெற வேண்டும் என்றெல்லாம் ஆசை கொண்டவன். அவனுடைய ஆசைக்கும் செயலுக்கும் இடையே எண்ணற்ற இடையூறுகள்......! 'அரும்பாடு மிகப்படவும் ஆட்சேபம் இல்லை, யார் தருவார் அத்தனைக்கும் இந்நாளில் கூலி?' என்ற கவிஞரின் உரையை அனுபவத்தில் கண்டவன். வஞ்சனையையும் பொய்யையும் துடுப்பாக்கிக் கொண்டவர்களுடைய வாழ்க்கைத் தோணி நிம்மதியாகச் செல்வதையும், உண்மையையும் நேர்மையையும் கொண்டு நடத்தப்படும் வாழ்க்கை, துயரம் தொல்லை ஆகிய பாறைகளின் மீது வறுமைப் புயலால் மோதி நொறுங்கிப் போவதையும் வாழ்க்கையில் தினசரிக் காட்சிகளாகப் பார்த்தவன். வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டு செய்வதறியாத நிலையில் வந்து கொண்டிருந்தான். வெய்யிலின் கொடுமை தாங்கமாட்டாமல் மர நிழலில் ஒதுங்கினான். அவன் கண்கள் தாமாகவே நட்டு வைக்கப்பட்ட கல்லின் மீது சென்றன. "ஆகா, இந்தக் கல்லுக்குத்தான் எவ்வளவு செல்வாக்கு! மனிதனை நிழலில் வாழவைக்க மனமில்லாவர்களுக்குக்கூட, இந்தக் கல்லின் மீது எவ்வளவு கருணை'-அவன் எண்ணம் சர்ச்சைசெய்தது. வேலை ஏதாவது கிடைக்குமா என்று கேட்டவுடன் வெறித்துப் பார்த்த மிராசுதார், போதுமான கூலி கேட்டதற்காக வேலைக்கே சீட்டுக் கிழித்த ஆலை அரசர், வேலையில்லாத் திண்டாட்டத்தை மறைக்க மக்கள் சோம்பேறிகளாகி விட்டார்கள் என்று கிளிப்பிள்ளைப் பாடம் படிக்கும் அரசியல்வாதி—ஆளும் வர்க்கம், வாழ்க்கையின் தொல்லைகளுக் கெல்லாம், பூர்வ ஜன்ம கர்மாவை சுட்டிக்காட்டும் வேதாந்திகள், அப்பப்பா, எப்படிப் பட்டக் கதம்பக் கூட்டம் மக்களினம்! அனுபவ ஏடுகள் அவனுடைய மனதிலே புரண்டன.

ஆனால் இந்தக் கல்...ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இதற்குக் கற்பிக்கப்பட்டு வரும் தத்துவங்கள்...அதனால் மனித இனத்துக்கு ஏற்பட்டுள்ள லாப நஷ்டம்...அதனால் ஏற்பட்ட வாதங்களும் வம்புகளும்—அவனுடைய எண்ணங்கள் அலைமோதி ஒரு நிலைக்கு வந்தன. அவனுக்குப் புரிந்து விட்டது...ஆம், முதலில்லாதவர்களுக்கு ஒரு மூலதனம்; எத்தர்களுக்கு ஒரு அரச பீடம்; ஏமாளிகளுக்கு ஒரு நம்பிக்கை, மனச் சான்றை விற்று விட்டவனுக்குப் பிழைக்கும் வழி, உழைக்கிறேன், வேலை கொடு என்று கேட்கும் பொழுது, சமுதாயம் முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிறது. ஆனால் படைப்பின் இரகசியத்தையே புரிந்து கொண்டவன் போல், கல்லின் முன் அமர்ந்து. கண்மூடி மௌனியாகி விட்டால், அவன் மீது இறைக்கப்படும் புகழுரைகள். செய்யப்படும் மரியாதை—மனிதன் மகானாகிறான்; அவன் பேசுகின்ற வெற்றுரைகள் வேதவுரைகளாகி விடுகின்றன. வழிப் போக்கனுக்குத் தெய்வம் வழிகாட்டியது! அவன் ஞானோதயம் பெற்று விட்டான்.

* * *

மறு நாள் விடியற் காலை. ஆற்றங்கரையை நோக்கிச் சென்ற பெண்கள், மரத்தடியில் காவியுடுத்திய 'மகான்' ஒருவர் தியானத்தில் அமர்ந்திருப்பதைப் பார்த்து ஆச்சரியத்தில் மூழ்கினர். குசுகுசுவென்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர். அன்று காலையிலேயே மகானின் விஜயம் பற்றிய செய்தி கிராமம் முழுவதும் பரவியது, பெரியோரும் சிறியோரும் பெண்டிரும் மகானின் தரிசனத்திற்கு வந்து குழுமினர். மகானோ மௌனத்தையே அணிகலனாகக் கொண்டு விளங்கினார்.

நாட்கள் நகர்ந்தன. மகானின் மகிமை வளர்ந்தது. சித்து வேலை தெரிந்தவர் என்றனர்; இறந்தவர்களோடு இரவு நேரங்களில் உரையாடுகிறார் என்றனர். தெய்வப்

★ தொடர்ச்சி 8ம் பக்கம்

நாத்திகர்கள்-நல்லவர்கள்!

'கண்டும் கண்டிலனே! என் கண் என்னமாயமோ?' என்ற மயக்கு வாதம் பேசி, மக்களின் அறியாமையை அரச பீடமாக்கிக்கொண்டு, யாக பூசையும், யோகாப்பியாசமும் நடத்திவாழும், மதவாதிகளைப் பற்றியும்; அவர்தம் உள்ளம் எத்தகைய பயங்கரமான நினைவுகள் வட்டமிடும் இருட்குகையாக இருந்துவருகிறது என்பது பற்றியும் தெளிவுபடுத்தியிருக்கிறார்; அறிவுக்கு முதலிடம் தரும் நல்லவர்களையெல்லாம் அந் நாத்தழும் பேறியவர்கள், நாச நினைப்பு கொண்டவர்கள், நாத்திகர்கள் என்று வர்ணிக்கும் புரட்டுக்கும் நல்லதொரு சாட்டையடி தந்திருக்கிறார், பிரிடீஷ் தொழிற் கட்சியின் இடதுசாரி தலைவராம் **அனூரின் பெவான!**

'ஐட்ரஜன் குண்டுகளை வெடித்து உலகத்தில் விஷத்துகள்களைப் பரப்பி கொடுமை செய்தவர்கள். தங்களை ஏசுவின் விசுவாசிகள் என்று சொல்லிக் கொள்வதில் என்ன நியாயம் இருக்கிறது! வெறியாட்டம் நடத்தும் அந்தகையவர்களை கண்டித்து, இன்றளவும் திருவாய் மலராத அமெரிக்க, பிரிடீஷ் மதத் தலைவர்கள்—நாத்திகர்களென நாம் வர்ணிக்கும் மனிதர்களைவிட எந்த விதத்திலே புனிதமானவர்களோ என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை! தோழர்களே! மனதிலுள்ள தப்பபிப்பிராயத்தை விட்டு விடுங்கள்; நாம்தான் தர்மத்தைக் காப்பவர்கள் என்ற மமதையை விட்டுவிடுங்கள், சிந்தியுங்கள்! ஐட்ரஜன் குண்டு சோதனைகளுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்ற யோசனையை வெளியிட்டிருப்பவர்களில் பெரும்பாலோர் நாத்திகர்களே!'

இரக்கமற்ற அரக்கர்கள் யார்? ஆண்டவன் பெயரைச் சொல்லிக்கொண்டு மனிதப் புழுக்களோடு விஷவிளையாட்டு நடத்துபவர்களா?

கொடுமை வேண்டாம்; அன்பால் குவலயம் தழைக்கட்டும்; என்று சொல்லும் நல்லெண்ணக்காரர்களா?

அன்பு வேண்டும் என்று சொல்லும் நாத்திகர்களா?

அராகஜம் நடத்தும் ஆத்திகர்களா? யார் நல்லவர்கள்! நன்றாக சிந்தித்துப் பாருங்கள்! இப்படியெல்லாம் தன் இதயக் குமுறலை கொட்டினாராம்; பனி மண்டலத்து பேரறிவாளன்! நாத்திகர்களே நல்லவர்களாம்! சொல்வது நாமல்ல! பெவான்! ஜுலை 21-ம் தேதி மித்திரனே வெளியிட்டிருக்கிறது இந்த செய்தியை!

இது வரையில்...

பாலையூர் மருத்துவமனையில். பலகணிப் பக்கம் கைத் துப்பாக்கியுடன் ஓர் உருவம் காத்திருப்பதையும் கவனியாது, ஆனந்தியின் நித்திரை அழகை ரசித்துக் கொண்டிருக்கிறான் நயினா முகம்மது...அப்போது அங்கே வந்த நர்ஸ், மருந்துச் சீசாவை மேசையின்மேல் வைத்து விட்டு, ஆனந்தி விழித்ததும் தன்னை அழைக்கும்படிச் சொல்லிப்போகிறாள். ஆனால் அந்த மர்மமான கரிய உருவமோ மருந்து சீசாவில் விஷத்தைக் கலந்து விடுகிறது...அதைக் கவனியாத நயினா, ஆனந்தி விழித்ததும், ஆர்வமுடன் மருந்தைக் கொடுக்கப்போகிறான். உதட்டருகில் மருந்தைக் கொண்டு போனதும், "விஷம், விஷம்" என்று கத்துகிறாள் ஆனந்தி. நயினாவின் மேல் சந்தேகம்கொள்ளுகிறாள். ஆனால், விஷம் இருந்த சிமிழைப் பார்த்தபோது, அது வேதபுரத்தில் தனது மருத்துவமனையில் இருந்தது—என்பதை உணருகிறாள். நயினாவின் மேல் தவறாக சந்தேகித்ததாகக் கூறுகிறாள்; நயனாவுக்கு 'உயிர்' வருகிறது......அப்போது திடீரென்று துப்பாக்கி வேட்டு சப்தம் எழும்புகிறது!

13

நயினா முகம்மது வெளியே ஓடினான். மருத்துவ மனையின் விளக்குகள் அனைத்தும் போடப்பட்டுவிட்டன. பெரிய வாயிற்புறத்தை நோக்கி அனைவரும் ஓடினார்கள். அங்கே இரண்டுபேர் கட்டிக்கொண்டு தரையில் புரண்டார்கள். ஒருவன் ஆஸ்பத்திரி காவற்காரன். இன்னொருவன் டைகர். காவற்காரனின் தோள் பட்டையிலேயிருந்து ரத்தம்'குபுகுபு'வென்று பெருகிக் கொண்டிருந்தது. அந்த வேதனையிலும் அவன் டைகரை விடாமல் பிடித்துக் கொண்டு, "ஓடிவாங்க! ஓடிவாங்க!"—என்று கதறினான்.

டைகரின் கையிலேயுள்ள துப்பாக்கி, மறுபடியும் வாய் திறக்காதவாறு மிக எச்சரிக்கையாக அவன் கையை காவற்காரன் அமுக்கிக் கொண்டான். அருகே ஓடி வருகிறவர்கள்மீது சுட்டு அவர்களை விரட்டி விட்டுத் தானும் தப்பித்துவிட எவ்வளவோ திமிறினான் டைகர். காவற்காரன் விடவில்லை. அதற்குள் நயினா முகம்மது டைகரின் மீது பாய்ந்து, அவன் கையிலேயிருந்த துப்பாக்கியைப் பிடுங்கிக்கொண்டான். டைகரைச் சுற்றி மருத்துவமனை சிப்பந்திகள் வளைத்துக் கொண்டார்கள். காவற்காரனுக்கு இப்போதுதான் வலியும் வேதனையும் தோன்ற ஆரம்பித்தது. அவன் தோள் பட்டையிலிருந்து வழிந்த குருதி உடல் முழுவதையும் நனைத்தது. முதலுதவிக்காக அவனை அவசர அவசரமாகப் படுக்கைக்குக் கொண்டு போனார்கள்.

காவல் பார்த்துக் கொண்டிருக்கும்போது சிறிது கண்ணயர்ந்து விட்டதாகவும், அப்போது யாரோ ஒருவன் சுவரேறிக் குதித்து வெளியே போக முயற்சிப்பதாகத் தெரிந்து அருகே ஓடியதாகவும், சிறிதும் எதிர்பாரா விதமாக அவன் துப்பாக்கியால் தன்னை சுட்டதாகவும், அதையும் பொருட் படுத்தாமல் ஓடிப் போய் அவனைப் பிடித்துக் கொண்டதாகவும் காவற்காரன் விளக்க முரைத்தான். போலீசாருக்குத் தகவல் அறிவிக்கப் பட்டு, சில நிமிடங்களுக்கெல்லாம் வந்து சேர்ந்தார்கள். இன்ஸ்பெக்டர், எவ்வளவு தான் கேட்ட போதிலும் பதில் சொல்லாமல் பிடிவாதமாக மௌனம் சாதித்தான் டைகர். அவன் கைது செய்யப்பட்டு போலீஸ் வண்டியில் ஏற்றப் பட்டான். நயினா முகம்மது வாயிலாக விபரமறிந்த ஆனந்தி வியப்பில் ஆழ்ந்தாள். பயங்கரப் பூகம்பத்திலே சிக்கிக்

கொண்டவளைப் போல நடுங்கினாள். இரு பெரும் ஆபத்துகளிலேயிருந்து அவள் தப்பித்துக் கொண்ட போதிலும் சொல்ல முடியாத ஒரு பீதி அவள் உள்ளத்தைக் கலக்கியது. நடந்து செல்லும் பொது காலடியில் மிதிபட்டுச் சாகக்கூடிய எறும்பினுங் கேவலமாகத் தன்னைக் கருதிக் கொண்டு மிருகத்தனமான வேலையில் ஈடுபட்டிருக்கிறானே டைகர்—என்று நினைக்கவே அவளுக்கு அச்சமாக இருந்தது.

"டைகர் யார்?"

"அவன் ஏன் இங்கு வந்தான்?"

"இந்த பயங்கர நிகழ்ச்சிக்குக் காரணம் என்ன?"

கேள்விகள் நயினா முகம்மதின் நெஞ்சத்தைக் குடைந்தன. அவன் ஆனந்தியிடம் டைகரைப் பற்றிக் கேட்டான்.

"டைகர், சகோதரன் என்பது உண்மைதானே?"

"அப்படிச் சொன்னானா அந்தச் சண்டாளன்?"

"ஆமாம்!"

"சகோதரனல்ல!... உங்களை ஏமாற்ற எண்ணியிருக்கிறான் படுபாவி! அவன் வேத புரத்திலே உலவும் பெரிய மனுஷன்! "பெரிய மனுஷன்" என்பது இந்த இடத்திலே அவனது சின்னப் புத்தியைக் குறிக்கும்!"

"அப்படியானால் அவன் என்னிடம் கூறிய தெல்லாம் பொய் தானா?..."

"என்ன கூறினான்?"

"முதலில் சிந்தாமணியைக் களங்கமற்றவள் என்று சொன்னான். பிறகு, அவள் செய்த மாபெரும் தவறை மறைப்பதற்காகவே நீ இவ்வளவு கஷ்டப்பட்டாய் என்று கதைத்தான்!"

"அவன் சொன்ன இரண்டு கருத்துக்களில் நீங்கள் எதை நம்பினீர்கள்!"

"இரண்டாவது கருத்தைத் தான்!"

"அய்யோ! சிந்தாமணி, சீரழிந்தவள் என்பதையா?"

"ஆமாம்!"

"தவறு! மிகத் தவறு! சிந்தாமணி செந்தாமரை மொட்டு! அவளைச் சேற்றிலே எறியாதீர்கள்!"

"ஆனந்தி! உன்னுடைய இந்தப் பெரிய உள்ளந்தான் என்னைக் கவர்ந்து விட்டது! மயில் தோகை விரித்தாற்போன்ற உன் மனத்திலே என்னைப் பற்றிய நினைவுகள் நீலப் பிறைகளாக அமையாதா வென்று நான் ஏங்குவதில் தவறென்ன இருக்க முடியும்!"

"எனக் கொன்றும் நீங்கள் நினைப்பது போல புனிதமான உள்ளம் இல்லை! சுருக்கமாகச் சொல்லப் போனால் நான் ஒரு புழுதி மேடு! இந்தப் புழுதிக் காற்று, "புண்யவதி" ஒருத்தியின் புனிதமான வாழ்க்கையை அசுத்தப் படுத்தக் காரணமாகயிருந்து விட்டதே யென்று நினைக்கும்போது நெஞ்சு படபடக்கிறது!"

"மறுபடியும் உன் தியாக உள்ளத்தைத்தான் திறந்து காட்டுகிறாய். சிந்தாமணிக்கு ஒளியேற்றும் முயற்சியைப் பாராட்டுகிறேன். ஆனால், உண்மை அந்த வெளிச்சத்திலே துல்யமாகத் தெரிய ஆரம்பித்துவிடும். எவ்வளவுதான் நீ சிரமப்பட்டாலும், சிந்தாமணி பூமியிலே சிந்திய பால்தான் என்பதை மாற்றிட முடியாது!"

நயினாவின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஆனந்தியின் கண்களிலேயிருந்து நீர் தாரை தாரையாக வழிய ஆரம்பித்தது.

"நான் சொல்வதை நம்புங்கள். அந்தப் பாதகன் டைகரின் பேச்சைக் கேட்டு, பிரசவ ஆஸ்பத்திரியில் இருந்த வேறொருத்தியின் குழந்தையை சிந்தாமணியின் அருகே படுக்கவைத்து அவளைக் குற்றம் சுமத்திய துரோகியாகி விட்டேன் நான்! சிந்தாமணி, அவனுக்கு மாமன் மகள்! தூரத்து உறவு! பெங்களூர் மாப்பிள்ளைக்கு சிந்தாமணியைக் கொடுக்கப்போகிற சேதி கேள்விப்பட்டதும், தனக்கு உதவாதது அழிந்து போகட்டும் என்று நினைத்து அவள்மீது வேசிப்பட்டம்

சூட்ட இப்படியொரு சூழ்ச்சியை ஏற்பாடு செய்தான்.

"நான் முதலில் தடுத்தேன். சிந்தாமணியின் நன்மைக்காகவும் அவள் பெற்றோர்களின் நன்மைக்காகவுமே அதைச் செய்வதாக என்னிடம் புளுகினான். ஏமாந்தேன். சிந்தாமணியை அவன் அபகரிக்கவே அப்படி சதி நடத்துகிறான் என்பது எனக்குப் புரியாது. நீங்களும் உங்கள் நண்பரும் மத்துவ மனைக்கு வந்து, சிந்தாமணியை வாய்க்கு வந்தவாறு வசை பாடி விட்டுப் போனது முதல் என் மனம் ஒரு நிலையில் இல்லை. மனச்சாட்சி, என்னைப் பார்த்துக் காரி உமிழ்ந்தது. "நீயும் ஒரு பெண்ணா?" என்ற கேள்வி, நான் திரும்பிய பக்கமெல்லாம் எதிரொலித்தது. ஓடி வந்தேன் உண்மையைச் சொல்ல!...அதற்குள் இப்படியெல்லாம் ஆகிவிட்டது.." ஆனந்தி, விம்மியழுது கொண்டே சொல்லி முடித்தாள். நயினாவுக்கு ஒரே புதிராக இருந்தது.

"அப்படியானால் சிந்தாமணி அப்பழுக்கற்றவளா?" என்று இருதயத்தை அழுத்திக்கொண்டே பெருமூச்சுடன் கேட்டான்.

"நிச்சயமாக! நீங்களே கொஞ்சம் சிந்தனை செய்து பாருங்களேன்—பத்து மாதக் கர்ப்பவதிக்குத் திருமணம் செய்ய எந்தப் பெற்றோர்தான் இவ்வளவு தைரியமாக முன் வருவார்கள்? நிறை கர்ப்பிணியைப் பெண்பார்க்க வருமாறு எந்த முட்டாள் தகப்பனாவது மாப்பிள்ளை வீட்டாருக்குக் கடிதம் எழுதுவானா?"

"நாங்களேதானே புறப்பட்டுவந்தோம்!"

"முன் அறிவிப்பு இல்லாமலா?"

"தந்தி கொடுத்துவிட்டுத்தான்!"

"ம்...! அது போதாதா... தந்திவந்தவுடன் பெண்ணை வெளியூருக் கல்லவா அனுப்பியிருப்பார்கள் — உள்ளூரில் வைத்திருப்பார்களா; தவறு அவர்கள்பால் இருந்தால்?"

"அதனால்தான் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டார்கள் என்று நாங்கள் சந்தேகப்பட்டோம்!"

"சந்தர்ப்பம் — சூழ்நிலை— இரண்டும் சிந்தாமணியின் சோக சரித்திரத்தில் 'குடிலர்'களாக உருவெடுத்துவிட்டன. உங்களிடம் பச்சையாகச் சொல்ல வேண்டியிருக்கிறதே என்பதற்காக வெட்கப்படுகிறேன். வேதனைப்படுகிறேன். உண்மையிலேயே ஒரு பெண்ணுடைய எதிர்காலத்தில் உங்களுக்கும் உங்கள் தோழருக்கும் அக்கரை இருக்குமேயானால் என்ன செய்திருக்கவேண்டும்?, சிவ நேசரும், சிவகாமியும் அவ்வளவு தூரம் அலறிய போது சிறிதாவது சிந்தித்திருக்க வேண்டும். உங்கள் அம்மாளையாவது, அல்லது வேறொரு பெண்ணையாவது விட்டு சிந்தாமணியை சோதித்துப் பார்த்து, உண்மையில் அவள் பிள்ளை பெற்றவளா?— என்பதை ஆராய்ந்திருக்க வேண்டும்! அவளது உடலமைப்பு மூலம் உண்மை விளக்கப்பட்டிருக்கும். இவை எதுவுமின்றி, ஒரு பரிதாபத்திற்குரிய பாவையைப் பாலைவனமாக்குவது நியாயமா? நீங்களே சொல்லுங்கள்! இப்போதும் ஒன்றும் முழுகி விடவில்லை. சிந்தாமணியின் வாழ்வை எழிலாக்குவது உங்கள் கையில் இருக்கிறது, உங்கள் தோழரின் மனதை உடனடியாக மாற்றுங்கள் உடைந்துபோன வீணையாக சிந்தாமணியை ஆக்

காமல் பாதுகாத்திடப் பாதை வகுத்திடுங்கள்!"

நயினா முகம்மதுவுக்கு ஆனந்தியின் பேச்சு, நம்பிக்கை யூட்டிற்று! அவசரமுடிவினால் ஒரு குடும்பப் பெண்ணின் வாழ்வை விஷமாக்கி விட்டதாகக் கருதினான். கண்ணீர் வடித்தான்.

"சரி ஆனந்தி! சிந்தாமணி, அழகப்பனின் மனைவிதான்! அதற்கு நான் பொறுப்பு! என் அவசர முடிவுக்கு நான் செய்து கொள்ளும் பிராயச்சித்தமே, அழகப்பன்—சிந்தாமணி திருமணந்தான்!..."

"அப்பாடா...என் மனதிலேயிருந்த பாரம் குறைந்தது! சத்தியமாகச் சொல்லுங்கள்... அழகப்பர் சிந்தாமணி திருமணத்தை..."

"நடத்தியே தீருவேன்!...... ஆனந்தி! அதை முடிந்த விஷயமாகவே கருது! இன்னும் முடியாமலிருக்கிற நம் விஷயத்தைப் பற்றி நாளைக்குப் பேசுவோம்—களைப்பாயிருக்கும் தூங்கு!"

"நம்விஷயமா?... இதற்கு முடிவே கிடையாது!"

"என்ன சொல்லுகிறாய் ஆனந்தி?"

"உங்களை நான் புரிந்து கொண்டேன். உங்கள்மீது எனக்கு அனுதாபந்தான்பிறக்கிறது"

"ஏன்?"

"நீங்கள் மிகவும் நல்லவர்!"

"பிறகு?"

"அழகானவர்—அன்பு வடிவானவர்—பண்பு நிறைந்தவர் ...இப்படி யெல்லாம் வர்ணித்துக்கொண்டே யிருக்கலாம் உங்களை!"

"உன் பிடிகை புரியவில்லை ஆனந்தி!"

"உங்களை நான் ஏமாற்ற விரும்பவில்லை!"

"ஏமாற்றமாட்டாயல்லவா? அதுபோதும் எனக்கு!"

"என்னை நீங்கள்........!"

"ஏன் தயக்கம்! உன்னை நான்...காதலிக்கிறேன். உலகத்திலே உன்னைத் தவிர வேறு எதுவும் எனக்கு உயர்வாகத் தெரியவில்லை!"

"குப்பை மேடு நான்! கூளம் என் வாழ்வு! என்னைக் காதலிக்காதீர்கள்! என்மீது அன்பு செலுத்தாதீர்கள்! நான் தங்களுக்குத் தகுதியானவள் அல்ல! தங்கள் அழகிற்கும் குணத்திற்கும் எத்தனையோ பேர் தவங்கிடந்து ஓடி வருவார்கள்!"

"ஆனந்தி! நேரடியாக "முடியாது" என்று கூறுவதற்குப் பதிலாக இப்படி சுற்றி வளைத்துப் பேசுகிறாயா? என்னை உயர்த்தியும் உன்னைத் தாழ்த்திக் கொண்டும் பேசுவது...... அறிவும் ஆற்றலுமிக்க சொற்பொழிவாளன் ஒருவனின் அவையடக்கம்போலவே எனக்குத் தோன்றுகிறது!"

"இல்லை...எனக்கு அப்படியெல்லாம் பேசுகிற திறமை கிடையாது! என் நிலைமையைக் குறிப்பால் உணர்த்தினேன்; அவ்வளவுதான். தாங்கள் கௌரவமான குடும்பத்து வாலிபர்...நானோ......!"

"என்ன சொல்கிறாய் ஆனந்தி!"

ஆனந்தி பேசவில்லை, அழுதாள். நயினாமுகம்மது தன்னையறியாமல் அவளது கண்களைத் துடைத்துக் கொண்டே, "அழாதே!" என்று ஆறுதல் கூறினான். ஆறுதல் கூறுவதற்கு ஒருவர் அருகே யிருக்கும்போது பாசமும் பற்றும் அதிகமாகப் பெருக்கெடுத்து சோகம் உச்சக் கட்டத்தை அடையு மல்லவா? ஆனந்தியும் அப்படித்தான் ஆனாள்! விம்மி விம்மிக் கதறினாள். "நான் விஷம்! தீண்டத் தகாதவள்!" என்று முனகினாள்!

"இருந்தால் என்ன? நான் முஸ்லீம்! சாதி வித்தியாசம் எனக்குக் கிடையாது!" என்றான் நயினா.

"சாதியோ மதமோ என்னைத் தீண்டத்தகாதவளாக ஆக்கவில்லை. நானே என்னை இந்த உலகத்தின் கழிவுப் பொருளாக ஆக்கிக் கொண்டேன். தயவு செய்து என் கண்ணீரை உங்கள் மிருதுவான விரல்களால் தொடாதீர்கள்.

கண்ணீரல்ல அது! இருதயத்துப் புண்ணிலே வடியும் சீழ்!

களங்கமுற்றவள்! சிந்தாமணியல்ல நான் சீரழிந்த மணி; என்னோடு உத்தமராகிய நீங்கள் பேசுவதே பாபம்!"

ஆனந்தியின் துக்கம் கட்டு மீறிக் கிளம்பியது. அவனது கண்டிப்புக்கும் அடங்காமல் தொண்டை அடைத்துக்கொண்டது.

நயினா முகம்மதுவின் முகத்திலே ஆவலின் ரேகைகள் ஒன்றன் பின் ஒன்றாக விழுந்து கொண்டேயிருந்தன.

"நீங்கள் தூய்மையானவர்! என்னைத் தொடாதீர்கள்!" என்று அவன் கையை எடுத்து விட்டாள்; அவனது மென்மை

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

கடவுளின் பிறப்பும் இறப்பும்

★ 5–ம் பக்கத் தொடர்ச்சி

பார்வை அவருக்கிருப்பதால் தீராத நோய்களெல்லாம் தீர்ந்து போகின்றன என்று பேசிக்கொண்டனர். கிராமத்தில் தினம் ஒரு திருவிழா நடந்தது. ஆற்றங்கரையில் கிடந்த கல் அதீத சக்திகளைப் பெற்ற தெய்வமாக விளங்கியது.

கருத்த மகானின் மேனி படிப்படியாகப் பொன்னிறத்தை அடைந்தது. பஞ்சடைந்த கண்கள் பகலவனைப் போல் ஒளி வீசத்தொடங்கின. செம்பட்டையான கேசம் கருப்பு ஜார்ஜெட் போல் மின்னியது. கன்னங்கள் பூரிப்பால் செழித்தன. மகான் எப்பொழுதாவது ஓரிரு வார்த்தைகளை உதிர்த்தார்; சொல்லிலே சோர்வில்லை—கனிவு இருந்தது. உழைப்பை நம்பியிருந்தபோது வறுமையை உருக்கி வார்த்த வார்படச் சிலையாக இருந்த தன்மையையும், உள்ளத்தில் கரவு கொண்டு வாழ்கின்ற நிலையில் உலகம் அள்ளிக் கொடுக்கும் வசதிகளையும் எண்ணி மகான் சில சமயங்களில் சிரிப்பார். ஆனால் அவர் உள்ளத்தில் அனுபவித்து, மகிழும் பேரின்பத்தின் பிரதிபலிப்பு அது என எண்ணி மக்கள் பரவசமடைவர்.

மகானின் மீது மக்களுக்கு அசையாத நம்பிக்கை பிறந்துவிட்டது. அந்தக் கல் ஊர் காக்கும் தேவதையாயிற்று. மகானின் காலடியில் பொற்காசும், வெள்ளிக் காசும் குவிந்தன. ஏன் காணிக்கை செலுத்த வேண்டும் என்று எவரும் எண்ணிடவில்லை. செய்த தீச் செயல்களுக்குக் காசு கொடுத்துக் கழுவாய் தேடினர் போலும்! மகானே பூரித்துப் போனார். மரத்தடியில் கிடந்த கல்லுக்கு மண்டபம் கட்டப்பட்டது. வறுமையால் விரட்டப்பட்டு வஞ்சக வாழ்வைப் பூண்ட மகானின் நெஞ்சத்தில் கொஞ்சுமொழி பரிமாறி சூடமேந்திச் செல்லும் கோமளவல்லிகளின் உருவம் அடிக்கடி தோன்றி தொல்லை கொடுக்கத் தலைப்பட்டது. காமன் கணைகளைத் தொடுத்தான். கட்டிளஞ் சாமியாரோ நிலைகுலைந்து நின்றார். பெண்ணென வந்ததொரு மாயப் பிசாசு மனத்துள் புகுந்து விட்டால், சித்தரும் பித்தராய் விடுவார்களல்லவா? சாமியார் சஞ்சலமடைந்தார். பக்குவம் தெரியாது, துவளும் என நினைத்துத் தொட்டுவிட்டு அது வேதுளும் வேங்கையாக மாறிவிட்டால்...பல சாமியார்களின் —மகான்களின்— கடைசி அத்தியாயம் அதுவாகத்தானே இருந்திருக்கிறது?

சாமியாரின் வாழ்க்கைக்கு சல்லாபம் தேவைப்பட்டது. தொல்லையில்லாமல் அதைப் பெறும் வழி...விம்மினார், வேதனைப்பட்டார். எத்தனையோ இரவுகள் பகலாயின......அவர் நிலை மட்டும்...நீடித்தது—வாடியிருக்கும் கொக்கானார்.

* * *

பௌர்ணமி. உலகெங்கும் நிலவு வெள்ளம். கள்ளரும், கருமியும், காமுகனும், கொம்பு கிடைக்காமல் ஆடிடும் கொடிகளும், மலர்ந்து, மணம் வீசி மகரந்தத்தை வாரி இறைத்தும் அனுபவிக்க ஆளில்லாமல் ஆடிடும் மலர்களும் மட்டுமே விழித்திருக்கும் நேரம். படுக்கையில் தூக்கமில்லாமல் வள்ளி புரண்டு கொண்டிருந்தாள். பருவம் பொங்கி நிற்கும் அவள் அங்கங்கள் அவளைப் பார்த்துப் பரிகாசம் செய்தன. நீல வானத்தில் நீந்திடும் நிலவு நெருப்புக் கோளமாகத் தோன்றியது. மெதுவாக எழுந்து எட்டிப் பார்த்தாள் ஜன்னல் வழியாக. தென்றல் அவள் உடலைத் தழுவியது. உடல் சிலர்த்தாள். உள்ளத்தில் வேதனைப் புயல் வீசியது. அவள் சமுதாயத்தின் சருகு—வாழ்க்கையை அனுபவிக்கும் தகுதியிருந்தும், அதற்கான உரிமையை இழந்துவிட்டவள் — கைம்பெண். வயதென்னவோ இருபதுதான்.

அங்கங்கள் தேவையைத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்ய, சமூகம் 'ஜாக்கிரதை' என்று எச்சரிக்கை விடுக்க, எத்தனை நாளைக்கு அவள் உள்ளம் நிலைத்தடுமாற, பிண வாழ்க்கை வாழ்வது? அதைவிட மரணம் மேலல்லவா? புறப்பட்டாள். ஆற்றின் கரங்களிலே தன்னை அர்ப்பணிக்க. உலகத்தின் ஒழுக்கம் உயிர்த்தியாகம் செய்ய அவளை அறை கூவி அழைத்தது...ஓடினாள்.

* * *

ஆற்றின் கரையில் நின்று, சுழித்தோடும் நீரைப் பார்த்தாள். அதன் சலசலப்பு 'சாவுதான் உனக்கு வாழ்க்கை!' என்று திருப்பித் திருப்பிச் சொல்வது போல் இருந்தது. வானத்தைப் பார்த்தாள்; வையத்தைப் பார்த்தாள், நிலவு மங்கை உலகக் காதலனோடு உறவாடிக் கொண்டிருந்தாள். நாணம் ஏற்பட்ட பொழுது மேகத்திரைக்குள் மறைந்து கொண்டாள். **இந்தக் காட்சி** வள்ளியின் ஏக்கத்தை அதிகப்படுத்தியது. விடுவிடு வென்று திரும்பி சாமியார் இருக்கும் மண்டபம் சென்றாள். அங்கு தெய்வமாக இருந்த கூழாங்கல் மனிதர்களின் அறியாமையை எண்ணி திக் பிரமை பிடித்துக் கிடந்தது. ஆண்டவனைக் கரம் குவித்து சேவித்த பின், ஆத்ம திருப்தியோடு ஆற்றில் விழ ஓடினாள். மதகுச் சுவரின்மீது நின்று ஆற்று நீரில் சாய்ந்தாள். அவள் ஆசையை வலிவுமிக்க இரு கரங்கள் அணைத்துத் தடுத்தன. ஆண்டவனே தன்னை ஆட்கொண்டு விட்டதாக எண்ணி, மகிழ்ச்சிப் பெருக்கால் கண் திறந்தாள்.

சாமியாரின் கரங்களில் சாய்ந்து கிடப்பதைக் கண்டவுடன், திடுக்கிட்டு அவர் பிடியிலிருந்து விலகினாள். அவர் கைப்பட்ட இடத்தில் இன்பம் புல்லரித்தது,

"நடு நிசியில் தற்கொலை முயற்சி......மகா பாவம் அம்மா!"

அவள் மௌனமாக நின்றாள்.

"இந்த இளம் வயதில் உனக்கு வாழ்க்கையில் வெறுப்பேற்படக் காரணம் என்னம்மா?"

அவள் பேசவில்லை.

"சும்மா சொல்லம்மா, என்னிடம் எதையும் மறைக்காமல் பேசலாம்"

அவள் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொன்னாள்—"இளமை"

"உன் கணவன்...?"

அவள் தேம்பினாள். 'விதவை' என்ற சொல் துக்கத்தை உடைத்துக் கொண்டு வெளியே வந்து விழுந்தது.

சாமியார் துணிவுடன் அவளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டார். மண்டபத்துக்கு அவளை அழைத்துச் சென்றார். வள்ளி வாழ்க்கையில் புது சுகம் கண்டாள்......

"வள்ளி, உன் வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ளும் உரிமை இப்பொழுது எனக்கு உண்டல்லவா...?"

வள்ளி, வரலாறு உரைக்க ஆரம்பித்தாள். பருவமடையுமுன் மாலையிட்டு, மலேயா **சென்ற கணவன்** அங்கேயே மாண்டு போனதையும், தான் கைம்பெண்ணாக இளமையைக் கழிக்க வேண்டி ஏற்பட்ட கதையையும் சுருக்கமாகக் கூறினாள்.

"உன் புருஷன் பெயர்...,"
சாமியார் பரபரப்போடு கேட்டார்.

"வே..."—அவள் எப்படி அதைச் சொல்லுவாள்.

"வேலப்பனா?"

"ஊம்..."

"அப்படியானால், நீ என் வள்ளியேதானா?"

அவள் விழித்தாள்.

"புதூரில் இருந்த நீ, இந்தப் பூங்குடிக்கு எப்படி வந்தாய்?"

"அத்தான் இறந்த செய்தி வந்தவுடன், அப்பா அம்மாவோடு இங்கு வந்துவிட்டேன்."

'உன் அத்தான் இறக்கவில்லை வள்ளி, அந்த வேலப்பன்தான் இந்த சாமியார்...," என்று கூறிக் கொண்டே விளக்கின் திரியைத் தாண்டிவிட்டு ஒளியைப் பெரிதாக்கினார் சாமியார். விளக்கொளியில் வள்ளியும் சாமியாரும் ஒருவரையொருவர் கூர்ந்து நோக்கினர்.

"வள்ளி!"—"அத்தான்!"

இரு குரல்கள் ஒரு சேர ஒலித்தன. ஈருடல் ஓர் உயிராயிற்று. இன்பம் கொள்ளை போயிற்று.

* * *

மறுநாள் சாமியார் வள்ளியோடு ஓடிவிட்ட செய்தி ஊரெங்கும் பரபரப்பை உண்டாக்கியது. சாமியாருக்கு பஜனை பாடிய அதே மக்கள், பழிச் சொல்லையும் இழிச் சொல்லையும் வள்ளலாக வழங்கினர். அந்த வட்டாரமே இதைப் பற்றிப் பேசியது.

இரண்டு தினங்கள் கழித்து, ஊர் நாட்டாண்மைக்காரருக்கு சாமியாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

ஐயா,

அறியாமையில் பிறக்கும் கடவுள், வஞ்சகர்களின் வேஷத்தால் வாழ்கிறார். தூய்மையான வாழ்க்கை மலரும்போது, அவர் தானாகவே மறைந்து போய்விடுவார். நான் மரத்தடியிலும் மண்டபத்திலும் வாழ்ந்த போது தூய வாழ்க்கை வாழ்ந்ததாக நினைக்கிறீர்கள். அதுதான் உண்மையிலேயே என்னுடைய வஞ்சக வாழ்க்கை. நான் இப்பொழுது நடத்தும் வாழ்க்கைதான் தூய்மையானது என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்; எனக்குத் தெரியும். நீங்களும் பூங்குடி மக்களும் எனக்கு செலுத்திய காணிக்கைத் தொகை ரூபாய் ஐயாயிரத்தையும் உங்கள் பெயருக்கு, ஊர் மக்களின் சார்பாக உரிமையாக்கி இருக்கிறேன். நான் இருந்த மண்டபத்திலுள்ள கல்லை எடுத்தெறிந்துவிட்டு, பணத்தைப் பயன்படுத்தி நூல் நிலையமொன்று நிறுவுங்கள். அறிவு வளரும்; அறியாமை அகலும்; அறம் தழைக்கும்.

இப்படிக்கு,
வள்ளியின் உரிமைக் கணவன்,
வேலப்பன்.

விடை எங்கே?

உலகப் போர் நடந்து கொண்டிருந்தபோது, பிரானிஸ்டார் மலிஜேஸ்கி என்ற வெள்ளையர் ஒரு காட்டு மிராண்டியை சந்தித்தாராம்.

'ஏனய்யா, வெள்ளைக்காரர்கள் இத்தனை மனிதர்களை எப்படிச் சாப்பிடுகிறீர்கள்?' என்றான் காட்டுமிராண்டி !

'சாப்பிடுவதா? சாகடித்த பிணங்களை வெள்ளைக்காரர்கள் சாப்பிடுவதில்லை' என்று சொன்னார் கோபத்தோடு வெள்ளையர்.

'அப்படியா!என்ன காட்டுமிராண்டிகளய்யா வெள்ளையர்!'

'வெள்ளையர்கள்- காட்டுமிராண்டிகளா?' பற்களைக் கடித்தார் அந்த வெள்ளையர் !

'பிறகென்ன—பிரயோஜனமில்லாமல் மனிதர்களை எதற்காகக் கொல்லவேண்டும்' இப்படி அலட்சியமாகக் கேட்டபடியே அங்கிருந்து நகர்ந்தானும் அந்த வனவாசி !

★ பச்சை இரத்தம் தந்த 11 பேர்! ★

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

விட்டு அலறியும் பயனில்லாமல் போகவே பலாத்காரத்தைப் பிரயோகிக்கிறது, பசுவின் கன்று!

கரோலிசும், அவனது கூட்டத்தவரும் கோரிக்கை விடுத்தார்கள்; மகஜர் எழுதினார்கள்; கூட்டம் போட்டார்கள்—பதில் கிடைக்கவில்லை! இப்போது துப்பாக்கியைத் தூக்கி விட்டார்கள்.

கரோலிசுக்குத் தெரியும் தான் செய்த காரியத்துக்கு ஆங்கிலேயர்கள் பூமாலை சூட்டமாட்டார்களென்று!

ஆமாம்; தூக்கு தண்டனை வழங்கினார்கள், நாட்டு விடுதலைக்கு ஆயுதமேந்துவதை விட்டால் வேறு வழியில்லை; என்று கண்ட அந்த வீரனுக்கு!

அகில உலகத்திற்கும் இந்தக் செய்தி ஒரு அணுகுண்டும் பிரயோகமாகவே இருந்தது!

கரோலிசுக்கு வழங்கியிருக்கும் தண்டனையைக் குறையுங்கள்.—என்று பிரிட்டிஷ் தொழிற் கட்சி, அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தது! ஆமாம்; இங்கிலாந்திலேயே இரு கருத்துக்கள்! எதிரியின் முகாமிலேயே இரு மாறுபட்ட அபிப்பிராயங்கள்!

போர் வெறி கொண்டவரென்று கருதப்படும் அமெரிக்க—வெளிநாட்டுக் காரியதரிசி டல்லஸ் கூட கரோலிசுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார்.

அந்த முற்றிய ஏகாதிபத்யப் பித்தர்களோ மறுத்து விட்டார்கள்.

தொழிற் கட்சி; டல்லஸ்—இந்த இரு பெயருக்குக்கூட மதிப்பு வைக்கவில்லை ஏகாதிபத்ய வெறிபிடித்த பிரிட்டனின் ஆளும் கட்சியாம் கன்சர்வேட்டிவ் கட்சி!

சைப்ரஸ் தீவைச் சேர்ந்த அந்தக் கட்டபொம்மனுக்கு அன்புத்தாய் ஒருத்தி உண்டு!

"அம்மா; உனக்கு அக்கா—எனக்குப் பெரிய தாயார்—சைப்ரஸ் என்னை அழைக்கிறாள்;'—எனச் சென்றவன்தான் திரும்பி வரவில்லை; அவன் தூக்கிலேற்றப்படும் செய்தி தான் வந்தது.

மகனைப் பார்ப்பதற்காகச் சென்றாள் தாய்! கடைசி முறையாக மகனைப் பார்த்து, 'உன் உயிர் விழலாகவில்லையடா மகனே; உன்னைப் பெற்ற என் வாழ்வும் வீணாகவில்லை! இப்போதுதானடா எனக்கு மகிழ்ச்சி!'—என்று வாழ்த்தி சாவூருக்கு வழியனுப்பலாம் என்று நினைத்துச் சென்றாள்.

பாவம் அந்தக் கிழவிக்கு ஆசை மகனுடைய முக தரிசனத்தைக்கூட காட்டவில்லை.

கரோலிசைத் தூக்கிலேற்றிவிட்டு, 'உன் மகன் ஜில்லிட்ட பிரேதமாகிவிட்டான்' – என்று கூறி அனுப்புகிறான் ஒரு போலீஸ்காரன்! (படம் 13)

பாவம்; புத்திர சோகம், ஒரு புறம் புத்தியைக் கலக்க, மகன் மகோன்னதப் புகழ்பெற்ற இன்பம் உள்ளத்திலே ஒரு பக்கம் மகிழ்ச்சியைப் பொங்க வைக்க ஏதும் சொல்லாமல் வீடு திரும்புகிறாள், தாய்க்கிழவி!

கரோலிஸ் தூக்கிலேற்றப்பட்டு விட்டான்! பிறகு பயங்கரவாதிகளின் நடவடிக்கை அடங்கிவிட்டதா? இல்லை!

கட்டபொம்மனுடைய பிரேதம் கயத்தாற்றுப் புளியமரத்திலே தொங்கியதும் தமிழகம் வாய்மூடி மௌனியாகி விட்டது. காரணம் இங்கே அவனுக்குப் பிறகு சரியான அமைப்பு முறை இல்லை.

அங்கோ நிலைமை வேறு விதம். நாட்டுக்கு மதிப்பு வைத்து, உயிரை உதாசீனப் படுத்திய வாலிபர்கள் ஒருவரா; இருவரா? ஏராளமாக அல்லவோ குவிந்திருக்கின்றனர்!

அன்றைய தினம் தூக்கிலிடப்பட்டவன் கரோலிஸ் மட்டுமல்ல டிமிட்ரிவ் என்னும் இன்னொரு வாலிபனும்கூட அதே தண்டனையைப் பெற்றான்!

இரு சைப்ரஸ் உயிர்கள் பிரிந்ததுதான் தாமதம்: பயங்கரவாதிகள் உடனே கார்டன் ஹில் (படம் 2 ஆ) நோன்னி ஹில்டன் (படம் 2 இ) என்னும் இரு பிரிட்டிஷ் உத்யோகஸ்தர்களைக் கைது செய்து, அவர்களைத் தூக்கி லேற்றிவிட்டார்கள்!

இரு சைப்ரஸ் ஜீவன்களுக்கு இரு பிரிட்டிஷ் ஜீவன்கள் பழி வாங்கப்பட்டன!

இப்படித்தான் இனியும்—என்று எச்சரிப்பதைப்போல அந்த ஆங்கில அதிகாரிகளைத் தூக்கிலேற்றிய செய்தியை கவர்னர் ஹார்டிங்கிற்கு அனுப்பி வைத்தார்கள்.

குடி மக்கள் அதிகாரிகளைப் பதிலுக்குப் பதில் தூக்கிலிட ஆரம்பித்தால் ஆட்சி பீடம் என்னாவது? சரிந்துவிடுமே அன்னியர் ஆட்சி, அரை நொடியில்!

பாவம்; என்ன காரணம் இந்தப் பழி வாங்கும் படலத்தைத் துவக்கிற்று—என்பதை யோசிக்கவில்லை, ஹார்டிங்.

உடன் அறிவித்தான், அந்த இரு அதிகாரிகளைத் தூக்கிலேற்றிய பயங்கரவாதிகளைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 10,000 டாலர் சன்மானம் வழங்குவதாக!

விடுதலை ஒன்றே விண்ணிலும் மண்ணிலும் உயர்ந்த பொருளென நினைத்தவனுக்குக் கிடைத்த பரிசு — பதின்மூன்று சவங்களில் ஒன்று!

அந்தப் பயங்கரவாதிகளின் தலைகளுக்குப் பத்தாயிரம் டாலர்—கவர்னர் ஹார்ட்டிங்கின் அறிவிப்பு இது!

இந்த அறிவிப்பு வந்த சில தினங்களில் தாய் நாடாம் கிரேக்கத்திலிருந்து ஒரு பதில் அறிவிப்பு சைப்ரசுக்கு வந்தது!

என்ன தெரியுமா?

ஒரு பெரிய கிரேக்க வணிகர்; சைப்ரசின் பயங்கரவாதிகளின் தலைக்குப் பணயம் வைத்திருந்தாரல்லவா, ஹார்ட்டிங்! **அந்த அக்ரமக்காரனின் தலையைக் கொண்டு வருவோருக்கு அதே 10,000 டாலர் பரிசு தருவதாக அறிவித்தார்!**

இரு உயிர்களுக்கு இரு உயிர்!—இது முதல் கட்டம்!

பயங்கரவாதிகளின் உயிருக்குப் பத்தாயிரம் டாலர்!—இது கவர்னரின் அறிவிப்பு!

அந்தக் கவர்னரின் தலையைக் கொண்டு வருபவருக்கு அதே பத்தாயிரம் டாலர் பரிசளிப்பு—இது கிரேக்க வணிகர் ஒருவரது அறிவிப்பு!

ஆனால் இதுவரை யாரும் பயங்கரவாதிகளைக் காட்டிக் கொடுத்து பத்தாயிரம் டாலர் பரிசு பெறவும் இல்லை.

அதேபோல கவர்னர் ஹார்டிங்கின் தலையை கிரீசுக்கு வெட்டி அனுப்பி அந்த வணிகப் பெருந்தகையிட மிருந்தும் அதே அளவு தொகையைப் பெற்றவர்களுமில்லை.

—அந்த அளவுக்கு வெளிநாட்டுப் பார்வையாளர்களுக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்திருக்கிறது, சைப்ரஸ் நிகழ்ச்சிகள்.

ஆனால் நெஞ்சு வெடிக்கும் நிகழ்ச்சியொன்றும் அதைத் தொடர்ந்து நடந்திருப்பதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை.

இரு கட்டபொம்மன்கள் தூக்கிலேற்றப்பட்டதைத் தொடர்ந்து நாடெங்கும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன!

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

தமிழகம் பற்றி கன்னட ஏடு!

● நடந்த சில வாரங்களாக தமிழகத்து அரசியல் நிகழ்ச்சிகள் பற்றியும், இங்குள்ள திராவிடர் இயக்கத்தின் வளர்ச்சி பற்றியும் கன்னடப் பத்திரிகையான "பிரஜா மாதா" எழுதியுள்ள கட்டுரையின் சாரம் கீழே தரப்படுகிறது. [தமிழாக்கம்: பெங்களூர், ப. செல்வராசன்.]

★

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி இப்போது ஒருபெரிய அரசியல் சூழ்ச்சியில் சிக்கிக் கொண்டிருக்கிறார். அவர் இது நாள் வரை பிறர் மீது ஏவி வந்த "சூது மந்திரம்" இப்போது அவர்மீதே திரும்பிவிட்டிருக்கிறது. தட்சிண பிரதேச அமைப்புப் பிரச்னையை தேர்தல் பிரச்சாரத்துக்கு தமிழ் நாடு காங்கிரஸ் இப்போது பயன்படுத்திக் கொள்ளும் என்பதை "சாணக்கியர்" ராஜாஜியால் கூட புரிந்து கொள்ள முடியாமற் போய் விட்டது.

தட்சிணப் பிரதேசப் பிரச்னையைப் பற்றி பேசக்கூடாது என்று காங்கிரஸ்காரர்களின் வாய்க்கு பூட்டு மாட்டிய பின் ராஜாஜிக்கு ஒரே திகைப்பும் அறுவறுப்பும் ஆத்திரமும் ஏற்பட்டு விட்டது. ராஜாஜிக்கு இப்போது இருப்பது இருவழி—ஒன்று, அவர் தட்சிணப் பிரதேசத்தைப் பற்றி தமது கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்; அல்லது காங்கிரசிலிருந்து அவர் விலகிக் கொள்ள வேண்டும். ராஜாஜிக்கு இது இரண்டுமே சாத்தியமல்ல!

இந்த சமயத்தில் ராஜாஜிக்கு நாம் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறோம். ராஜாஜி இனி மேல் எல்லோருக்கும் "மதிப்பிற்குரிய ஆச்சாரியாராக', மட்டும் இருக்கட்டும்! அரசியல் அவரைப் பொறுத்த மட்டில் ஆகாத ஒன்றாகி விட்டது என்பதை அறிந்து கொள்ளட்டும். தனக்கு சம்பந்தமில்லாத எல்லா விஷயங்களுக்கும் "மூக்கை" நீட்டிக் கொண்டு ஓடாமல் மௌனமாக இருந்தால்தான் அவரது பழைய பெருமையும் மதிப்பும் இனி மேலும் நீடிக்க முடியும்.

திராவிடர் இயக்கம்தான் இப்போது சென்னை அரசியலின் மூலஸ்தானமாக விளங்குகிறது! தட்சிண தேச மெங்கும் இப்போது திராவிட கழகம் திராவிடமுன்னேற்றக் கழகம் என்பதே பேச்சு. இத்தனை நாள் மௌனமாக இருந்து வந்த முதலமைச்சர் காமராசரைக் கூட இந்த இயக்கம் இப்போது வாய் திறந்து பேசச் செய்து விட்டது.

ஜூன் 9-ம் தேதி திருச்சிக்கு சமீபத்திலுள்ள குப்பம்பட்டியில் பேசும்போது காமராசர், 'தட்சிணபிரதேசம் தேவை என்போரும் திராவிட முன்னேற்றக் கழகத்தவரும் ஒரே கட்சி. காங்கிரசையும் என்னையும் தேர்தலில் தோற்கடிப்பதே இவர்களது நோக்கம்' என்று பேசியிருக்கிறார். இந்த பேச்சு தமிழர்களுக்கு திகைப்பையும் ஆச்சரியத்தையும் தந்திருக்கிறது.

ஏனெனில், காமராசர் கூற்றுப்படி பார்த்தால், பண்டித நேரு–ராஜாஜி – தேபர் – பந்த்–சுப்பிரமணியம் – பக்தவச்சலம் முதலியோரும் திராவிட முன்னேற்ற கழகத்தை சேர்ந்தவர்கள் என்பதுதானே ஏற்படுகின்ற உண்மைப்பொருள்!

தட்சிணபிரதேசம் கேட்போர் உதவாக்கரைகள் என்கிறார் காமராசர், சரி! ஆனால் இந்த உதவாக்கரைகளில் 'சில' அவருடைய மந்திரி சபையிலும் இருக்கின்றனவே! அப்படியானால் காமராசர்தான் திராவிட முன்னேற்ற கழகத்திற்கு தலைவரா?

காமராசர் அர்த்தமில்லாமல் பேசி இருக்கிறார்!

★

முன்பொரு சமயம் காமராசர் கூறினார் — 'ராஜாஜியும் நாயக்கரும் அரசியலிலிருந்து விலகிக்கொண்டு விட்டால்தான் நாட்டுக்கு விமோசனம் என்று. ஆயின் இப்போது மட்டும் நாயக்கரை பார்த்து அவ்விதம் சொல்ல மறுக்கிறார்—அஞ்சுகிறார்!

இன்னொரு சுவையான செய்தி! ராஜாஜிக்கும் நாயக்கருக்கும் அபிப்பிராய பேதம் இருப்பதாக வெளிக்கு தெரிந்தாலும் உள்ளுக்குள் அவர்களிருவரும் மிக மிக நெருங்கிய நண்பர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். தமது 80 வது வயதில் மணியம்மையை மணம் செய்துகொள்ள விரும்பி, நாயக்கர் ராஜாஜியிடம் இது குறித்து கேட்டபோது, தாராளமாகச் செய்து கொள்ளுங்கள் என்று கூறி ஆசீர்வதித்து அனுப்பினார் ராஜாஜி! மணம் முடிந்தது; நாயக்கரின் பிரம்மாண்டமான இயக்கம் உடைபட்டது. திராவிட முன்னேற்ற கழகம் பிறந்தது!

ராஜாஜியை திராவிட முன்னேற்றக் கழகத்தின் நண்பர் என்கிறார் காமராசர். காமராசரை திராவிடக் கழகத்தின் நண்பர் என்கிறார் ராஜாஜி...

தேர்தல் நெருங்கும் நேரமிது. அதனால் தற்காலிகமாக காமராசரும் ராஜாஜியும், தமிழ்நாட்டின் தலை சிறந்த இயக்கங்களான கழகங்களை சிநேகம் பிடிக்கப் பார்க்கிறார்களோ என்னவோ? ✶

முடிவை மாற்றிக் கொள்ள முடியாதாம்!

○ ○ ○

தி. மு. க. வுக்கு தேர்தலில் தனிச் சின்னம் தர மறுப்பு!

தலைமை நிலையத் தூதுக் குழுவிற்கு தேர்தல் அதிகாரி பதில்!

அடுத்து நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் கலந்துகொள்வது என்ற முடிவுக்கேற்ப, தேர்தலில் தி. மு. கழகத்திற்குத் தனிச் சின்னம் தரப்பட வேண்டுமென்று டில்லியிலுள்ள பிரதம தேர்தல் அதிகாரி சுகுமார் சென் அவர்களை, சென்னை மாநிலத் தேர்தல் அதிகாரியின் மூலமாய், தி. மு. கழகத் தலைமை நிலையம் கடிதம் மூலம் கேட்டிருந்தது.

சென்ற பொதுத் தேர்தலில் கலந்துகொண்ட கட்சிகளுக்கு-அதிலும், பதிவான மொத்த வாக்குகளில் மூன்று சதவிகிதம் பெற்ற கட்சிகளுக்கு மட்டுமே தனிச்சின்னம் வழங்கப்படுமென்றும், இதற்கான அத்தாட்சிகளைத் தரும் கட்சிகளுக்கே தனிச்சின்னம் வழங்கப்படுமென்றும் பிரதம தேர்தல் அதிகாரியின் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே, பிரதம தேர்தல் அதிகாரியை நேரில் கண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலையை விளக்கித் தனிச்சின்னம் வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு விவாதிக்க 21—7—56 இரவு சென்னையிலிருந்து தி. மு. கழகத் துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன், திராவிட பார்லிமெண்டரி கட்சிச் செயலாளர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., எஸ். வேதரத்தினம் எம். ஏ., ஆகியோர் பெங்களூர் புறப்பட்டுச் சென்றனர்.

தேர்தல் அதிகாரிகள் மாநாட்டுக்குத் தலைமைவகிக்க பெங்களூருக்கு வந்திருக்கும் பிரதம தேர்தல் அதிகாரி சுகுமார் சென் அவர்களை, 23—7—56 அன்று காலை 9-மணிக்கு பெங்களூர் ஜலேஹல்லி என்ற இடத்தில் துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன், எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., எஸ். வேதரத்தினம், பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எஸ். வி. பதி ஆகியோர் சந்தித்தனர்; அரைமணி நேரத்திற்கு மேல் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

சென்ற பொதுத் தேர்தலில், தமிழகத்தில் மட்டும் பதிவான மொத்த ஓட்டுகள் 75-இலட்சம்; அதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு ஆதரவு பெற்றவர்கள் 15-இலட்சம் வாக்குகள் பெற்றிருக்கின்றனர்; எனவே 20 சதவிகிதத்திற்கு மேலாகவே தி. மு. கழக ஆதரவாளர்கள் ஓட்டுப் பெற்றிருக்கின்றனர்; தமிழ் நாட்டில் மட்டும் 197 தொகுதிகளில் 81 தொகுதிகளில் மட்டுமே தி. மு. கழக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்கள் போட்டியிட்டனர்; அவர்களில் 38 பேர் வெற்றியடைந்துள்ளனர் என்றும், தமிழ் நாட்டில் அமைப்பு முறையுடன் கூடிய எதிர்க்கட்சி தி. மு. கழகம்தான் என்றும் எடுத்துக்காட்டி அதன் கிளைகள், உறுப்பினர்கள், நடத்திய மாநாடுகள் ஆகியவைகளின் எண்ணிக்கை விவரங்கள் ஆகியவைகளிலிருந்து அண்மையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் செய்த முடிவுகள் வரை பிரதம தேர்தல் அதிகாரியிடம் விளக்கி, தனிச்சின்னம் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டது.

விவரங்களனைத்தையும் ஆற அமரக்கேட்ட பிரதம தேர்தல் அதிகாரி, தாம் ஏற்கனவே செய்த முடிவை இப்போது மாற்றுவதற்கில்லை யென்றும், திராவிட முன்னேற்றக்கழகச் சார்பில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் தாம் அறிந்தவையே என்றாலும், தமது உத்தரவை மாற்ற இயலாத நிலையில் இருப்பதாகவும் கூறினார்.

சென்ற தேர்தலில் தி. மு. கழகம் அடைந்த வெற்றிப் பட்டியலும், கழகத்திற்கு பொதுமக்களிடமிருக்கும் ஆதரவை விளக்கும் குறிப்பும் பிரதம தேர்தல் அதிகாரியிடம் கொடுக்கப்பட்டன.

"நம்நாடு" 24—7—56.

❋

புத்தர் பொம்மை

எதிரே பயங்கரமாக உறுமிய வண்ணம் பாயத் துடிக்கும் வேங்கை—பின்னால் படமெடுத்தாடும் பாழும் நாகம்—தலைக்கு மேலே கூறிய நகங்கள் விரித்துக் கொத்திடத் துடிக்கும் கழுகுக் கூட்டம்—

இதற்கிடையில் ஒரு பச்சிளம் பாலகன் நின்றால்...? "அப்பப்பா! நினைக்கவே நடுக்கம் பிறக்கிறதே, ஏன் இப்படி ஒரு பயங்கரக் கற்பனை?" என்கிறீர்களா?

அதோ பாருங்கள்; நடுங்கும் கால்கள்—கலங்கும் கண்கள்—அதிலிருந்து வழிந்தோடும் கண்ணீர் வெள்ளம்—இந்த வேதனைக் கோலத்தோடு நிற்கிறானே ஒரு சிறுவன், அவனது பரிதாப நிலையை விளக்கத்தான் இந்தக் கற்பனை! அவனுக்கு ஏன் இந்நிலை வந்தது? அங்கே வேங்கை, பாம்பு, கழுகு—எதுவும் இல்லையே! இல்லைதான்—உண்மைதான்! ஆனால், அவை அனைத்தும் ஒன்றாக உருவானதோ என்று நினைக்கும் வண்ணம் அவன் எதிரில் நிற்கிறார் ஒரு கரிய உருவ பெரிய மனிதர்!

"சொல்!......எங்கே அந்த பொம்மை....?.....ம்.....எங்கே?..."—அந்த மனிதர் பேசினார். இல்லை; உறுமினார். குரல் அத்தனை 'இனிமை'யாக இருந்தது!

முத்து—அவன்தான் அந்தச் சிறுவன்—ஒருமுறை தன் நடுங்கும் கைகளால், கண்ணில் வழிந்த கண்ணீரைத் துடைத்தான்.

"சொல்லுடா......."—அவர் மீண்டும் கத்தினார்.

"வந்து....வந்து......அதை....நான்..."—முத்து பேச முடியாது இழுத்தான். அவன் ஏன் உளறுகிறான்? அவன் செய்த தவறுதான் என்ன?

இந்த யோசனைக்கெல்லாமா நேரம் தருவார் அந்த முரட்டு மனிதர்? தன் கையிலிருந்த தடித்த பிரம்பை ஓங்கினார். மறுகணம் 'ஐயோ' என்ற அலறல் கிரீச்சிட்டது! ஆமாம்; முத்துதான் அழுதான். அடியை—அது தரும் வலியைத் தாங்கும் சக்தி அவனிடம் இல்லை. அவன் சிறுவன் தானே!

"கத்துடா!....திருட்டுப் பயலே!..." என்று மீண்டும் இரைந்தார் அவர்.

"ஐயோ!...திருடனா?"—தன்னையும் மீறி இப்படிக் கத்தினான் முத்து. சற்றும் எதிர்பாராத வண்ணம் தன் மீது அபாண்டப் பழி சுமத்தப்படும் போது, குற்றமற்றவன் எத்துணை துடிக்கிறான்; துவளுகிறான்! 'நான் திருடனா?' என்று கேட்டுவிட்டு அழுகிறானே அந்தச் சிறுவன், அவனும் குற்றமற்றவன்தான்!

ஆனால், அன்று நிகழ்ந்த அந்தச் சம்பவம்......

பொம்மை வாங்கலையோ-புதிய பொம்மை வாங்கலையோ...?

பொம்மைகள் அடங்கிய ஒரு தள்ளு வண்டியை நகர்த்திய வண்ணம் இப்படிப் பாடிக் கொண்டு சென்றான் முத்து. ஆமாம்; அவன் முதலாளி ஒரு பொம்மை வியாபாரி. அவன்—அந்த அனாதைச் சிறுவன்—கூலிக்கு பொம்மை விற்கும் ஒரு அடிமை!

சீமான்கள் வாழும் தெருவொன்றில் அவன் நுழைந்தான். ஓரிடத்தில் நின்றான். பாடினான். பலன் கிடைக்காமலா போகும்? குழந்தைகளின் கண்ணோரத்தில் ஒரு துளி நீரைக் கண்டாலும் துடித்து விடுவார்களே, பெற்றவர்கள்! அதுவும் பணம் படைத்தவர்களைப் பற்றி கேட்கவா வேண்டும்? அன்று நல்ல வியாபாரம்! பொம்மைகள் பறந்தன. காசு குவிந்தது. கடைசியில் ஒரே ஒரு - பொம்மை — புத்தரின பொம்மைதான் அவன் வண்டியில் மிஞ்சி நின்றது.

முத்துவுக்கு மகிழ்ச்சி! வண்டியைத் தள்ளிக் கொண்டு நகரத் தொடங்கினான். ஆனால், திடீரென்று நின்றான். வண்டியின் பக்கத்திலே நின்று கொண்டு, புத்தரின் பொம்மையை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிறுமிதான் அவன் கவனத்தைக் கவர்ந்தாள். முத்து கவனித்தான். கிழிந்த உடை—பரட்டைத் தலை—'பாவ'மான தோற்றம்— இவை அந்தச் சிறுமியை 'ஏழை' என்று எடுத்துக் காட்டின. அவளது ஏக்கப் பார்வை முத்துவை என்னவோ செய்தது.

"என்ன பாப்பா? என்ன வேண்டும்?" என்று கேட்டான் பரிவுடன்.

"பொம்மை..." கையைக் கட்டி மழலை பேசியது அந்தப் பாப்பா.

"காசு?..."

"இல்லையே!..."—பரிதாபத்தோடு சொன்னாள் இப்படி. அவள் கண்கள் கலங்கின. அழுகையும் கிளம்புவதற்குத் தயாராக நின்றது. பாவம், தன்னைப் போன்ற சிறுமிகள் ஆளுக்கொரு பொம்மை வாங்கி, சிரித்து மகிழ்ந்து செல்வதைக் கண்ட பிஞ்சு நெஞ்சல்லவா, ஆசை தோன்றத்தானே செய்யும்? கிடைக்காவிட்டால் அழுகையும் வரத்தானே செய்யும்?

முத்துவின் மனம் வேதனையால் நிரம்பியது. ஏழையைக் கண்டு ஏழைதானே இரங்க வேண்டும்! அவன் அந்தப் பொம்மையைப் பார்த்தான். புத்தர் பொம்மை! அன்புபற்றி உலகுக் குரைத்த மேதை! அப்போதும் அவனுக்கு 'அன்பை'ப் போதித்து விட்டார்! முத்து பொம்மையை எடுத்தான். கணக்கு பார்த்து காசு வாங்கும் போது முதலாளி கோபப்படுவாரே என்று நினைக்கவே இல்லை. அதை அந்தப் பாப்பாவிடம் கொடுத்தான். அவள் வாங்கிக் கொண்டாள். அப்பப்பா! அவள் முகத்திலேதான் எத்தனை களிப்பு! சிரித்துக் கொண்டே ஓடினாள். பக்கத்திலிருந்த தன் குடிசைக்குள் நுழைந்தாள்.

முத்துவும் கல கலவென்று சிரித்தான். ஆனால்...இதோ, கலங்கியபடி நிற்கிறான்......... திருடனென்ற பட்டமேற்று துடிக்கிறான்...

"நான் திருடவில்லை...ஐயா! என்னை மன்னித்துவிடுங்கள்... அந்தப் பொம்மையை...ஒரு பாப்பாவுக்கு இனாமாகக் கொடுத்துவிட்டேன்"—உண்மையைச் சொல்லிவிட்டான் முத்து.

முதலாளி மகிழவில்லை. அன்பு நெஞ்சமில்லா அந்த முரடர் அடிக்கத்தான் செய்தார் அவனை. அலறித் துடிக்கும் அளவுக்கு அடித்தார். முத்து அழுதான்.

"இனாம் கொடுத்தாயா, முட்டாளே! எவன் வீட்டு சொத்து...ஓடு!...உனக்கு இங்கில்லை வேலை!"—முதலாளியின் கட்டளை பிறந்தது.

முத்து வெளியே ஓடினான். நடந்தான். "என்ன உலகம் இது! ஐயோ, நான் அன்பு கொண்டது தவறா?" என்று குழம்பினான். அடிபட்ட இடங்களைத் தொட்டுத் தடவினான்; நடந்தான்; நடந்து கொண்டே இருந்தான்.

வெகு தூரம் நடந்துவிட்டான், அவன்.

ஓரிடத்தில் நின்றான். எங்கே வந்துவிட்டோம்—என்று பார்த்தான். சிறுமிக்கு பொம்மை கொடுத்தானே அந்த இடம் தான். முத்து ஏதோ யோசித்தான். "அவளுக்கு சிரிப்பு தந்தேன், நான். எனக்கு அழுகை கிடைத்தது பதிலாக! போகட்டும்; அந்தத் தங்கத் தங்கை மகிழ்வதையாவது கண்டு களிப்போம்!" என்று எண்ணினான். குடிசையை நெருங்கினான். மெதுவாகத் தலையை உள்ளே நீட்டினான்.

அதே சமயம்—

வேகமாக வீசி எறியப்பட்டு பாய்ந்து வந்த ஏதோ ஒன்று அவன் தலையைத் தாக்கியது. கீழே விழுந்தது. 'ஐயோ' என்று அலறினான் முத்து. கீழே பார்த்தான். புத்தர் பொம்மை! சுக்கல் சுக்கலாக உடைந்து கிடந்தது கீழே!

அப்போது உள்ளேயிருந்து கேட்டது ஒரு கோபக் குரல். "இனாம் கொடுத்தானாம் இனாம்! இந்தக் காலத்தில் எவன் கொடுப்பான் இனாம்! முளைக்கும்போதே ஏன் நாயே பொய் சொல்கிறாய்? பொம்மை வாங்க ஏது காசு? எங்கே திருடினாய்? எங்கேடி திருடினாய்?" என்று அதட்டியது அந்தக் குரல். அதைத் தொடர்ந்து 'பளார் பளார்' என்று அடிக்கும் சப்தம்! 'ஐயோ, ஐயோ!' என்ற அந்தப் பாப்பாவின் அலறல் குரல்!

முத்துவுக்கு வாய் விட்டுக் கதறவேண்டும் போலிருந்தது. சிதைந்து கிடந்த புத்தர் பொம்மையை நோக்கினான். அவர் போதித்த அன்பு எங்கே? அவனுக்கு வாய்த்த முதலாளி—அந்தப் பாப்பாவுக்கு வாய்த்த அப்பா—இப்படியாக இந்த உலகத்துக்கு வாய்த்த அன்பற்றவர்கள் எத்தனையோ பேர்!

முத்து தன் தலையில் வழிந்த இரத்தத்தைத் துடைத்தான். செந்நிறமான கையை வெறிக்கப் பார்த்தான். ஏனோ சிரித்தான். நடந்தான். அவன் எங்கே போகிறான்? "ஐயோ உலகமே! அன்பு நெஞ்சம் கொண்டோர் பரந்த உன் உடலிலே, எந்த மூலையில் இருக்கிறார்கள்?" என்று தேடிக் கொண்டு செல்கிறானோ? இருக்கலாம்; எனினும் மிக மிகக் கடினமான பயணமல்லவா அது!

ஆனால் தம்பிகளே! தங்கைகளே! அந்தப் பரிதாபத்திற்குரிய முத்து நண்பன் உங்களிடமும் வரலாம்; வருவான். அப்படி வந்தால், "அன்புள்ள முத்துத் தம்பியே! நீ தேடிச் செல்கிறாயே, அந்த அன்பு நெஞ்சம் இதோ என்னிடம் இருக்கிறது.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்ற வள்ளுவரின் வாக்கைப் படித்திருக்கிறேனே நான்!" என்று பெருமையாகச் சொல்லுங்கள்! அன்பு பூண்டு வாழ்ந்திருங்கள்!

—சொர்ணம்.

MURASOLI விலை 0-2-0

சுப்ரமணியன்; புதுவை.

(?) குருடன் காணும் சித்திரம் எது?

சிந்தனைச் சித்திரம்!

பி. சுப்பராயலு; கிண்டி.

(?) இந்த உலகத்தில் தோன்றிய முதல் பாஷை எது? அது இன்னும் வழக்கிலிருக்கிறதா?

நயன பாஷைதான் முதன் முதலில் தோன்றியது. காதலர் உலகில் அது இன்னும் இலக்கண இலக்கியங்களுடன் வழங்கப் பட்டு வருகிறது.

(?) ஜனநாயகம் எங்கே இருக்கிறது?

நேருவின் நாக்கிலும், வாக்கிலும் தான்! அவர் செயலில் அது இல்லை!

(?) குழப்பம்: குளறுபடி-இவைகளுக்குப் பொருள்கூற முடியுமா?

காங்கிரசின் அரசியலைப் பொறுத்த வரையில் அந்த வார்த்தைகளுக்கு நேரு வெளி நாடு போயிருக்கிறார் என்று பொருள்!

சி. இராசு; மதுரை.

(?) பொது மக்களில் எத்தனை வகை உண்டு?

கேட்டுத் தலையசைத்துத் தன் வழி போகும் வகை; வீட்டிலும் சென்று சிந்திக்கும் வகை; கேட்டை நீக்க உடன் செயல்படும் வகை; இவைகளில் கலந்து கொள்ளாமல் தலையணை வைத்துத் தூங்கும் வகை—இப்படிப் பலவகை உண்டு!

(?) காந்தியார் எப்போது அதிகமாகத் தடியடிகள் பெற்றார்?

அரசாங்கத் தபால் தலைகளில் படமாக இருக்கும்போது தான் அவர் தடியடிகளைவிடக் கொடுமையான முத்திரையடிகளைப் பெற்றிருக்கிறார்!

(?) நேருவுக்குப் பிறகும் கூட காங்கிரஸ் கலகலத்துப் போகாது—என்கிறேன்!

தவறு; முப்பத்தி மூன்று நாட்கள் அவர் வெளிநாடு போயிருந்த போதே இவர்கள் குட்டு வெளிப் பட்டுவிட்டதே!

(?) நேரு பாரிசிலிருந்து சலவை செய்து கொண்டுவரப்பட்ட ஆடைகளையா அணிந்து கொள்கிறார்?

இல்லை; உள் நாட்டிலிருக்கும் போது அவர் 'காந்தீய ஆடை'யையும், வெளி நாட்டில் 'பஞ்சசீல ஆடை'யையும் மட்டுமே அவர் அணிந்து கொள்கிறார். அவை அழுக்கேறிவிட்டால் அடிக்கடி 'சோஷலிச பாணி' என்னும் நிலையத்தில் சலவை செய்து கொள்கிறார்-அவ்வளவு தான்!

★

★ 9ம் பக்கத் தொடர்ச்சி.

மாண்டன் சாஸ் என்னுமிடத்தில் ஒரு 'மிஷின் கன்'களை இயக்கி மாபெரும் படுகொலைக் காட்சியொன்றைச் சிருஷ்டித்தது, அரசாங்கம்!

அதிலே உயிர் துறந்தோர்கள் தொகையோ பதினொன்று!

அந்தப் பதினொருவரும் வாலிபர்கள்; பச்சை ரத்தம் பாய்ந்தோடும் பருவச் சிட்டுகள்!

ஒரு லாரியிலே வெடி மருந்துப் பொருள்களை ஏற்றி வந்து ஒரு இராணுவ முகாமைக் கைப்பற்றுவதற்காக வந்தார்கள் இந்த இளைஞர்கள்; எனவேதான் இயந்திரத் துப்பாக்கியைப் பிரயோகித்தோம்—என்று பதில் சொல்கிறார்கள், இராணுவத்தினர்!

இது எந்த அளவுக்கு உண்மையோ தெரியவில்லை. எப்படியோ விடுதலை வேண்டி நின்ற பதினொரு உயிர்களை துப்பாக்கி ரவைகள் பிணமாக்கி விட்டன.

ஆளும் வர்க்கம் ஆடி ஓடித் திரிந்த பதினொரு ஜீவன்களைப் பலிவாங்கி விட்டது!

சைப்ரஸ் கிரேக்கத்துடன் இணைய வேண்டும்—என்கிற மகோன்னதக் கொள்கைக்காக உயிர் விட்ட பதினொரு பிணங்களும் அதோ, படத்தில் கிடத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் படத்தை வெளியிடக் கூடாதெனத் தடை விதித்தது அரசாங்கம்.

ஆனால் எப்படியோ அந்தப் படுகொலையை வெளி உலகிற்கு எடுத்துக் காட்டிவிட்டார்கள் பத்திரிகை நிருபர்கள்.

நாட்டு வெறி பிடித்த அந்தப் பதினொரு உயிர்களுக்கு திராவிடத்தின் விடுதலைப் படையில் அணிவகுத்து நிற்கும் நாமும் கைகூப்பி அஞ்சலி செய்வோம்!

எம் முன்னோடிகளே! நீங்கள் விட்டுச் சென்ற பணியை உம் தோழர்கள் தொடர்ந்து நடத்தட்டும்—என வாழ்த்துக் கூறுவோம்!

★ 6-ம் பக்கத் தொடர்ச்சி

மிகுந்த கரம் அவன் கையிலே யெழுப்பிய ஸ்பரிச உணர்ச்சியை "அமரயாழ்" என்கிறார்களே; அதுகூட எழுப்பாது தான்! கையிலே மீட்டப்பட்ட நரம்பு, நெஞ்சிலே நாதம் எழுப்பியது! அசைவற்றுவிட்டான் நயினா. அவன் இதழ்கள் ஈனசுரத்தில்,

"ஆனந்தி!" என்று அசைந்தன.

"ஆனந்தி—யார் தெரியுமா? அவள் கற்பிழந்தவள்! டைகரின் வைப்பாட்டி!"

ஆவேசம் வந்தவள்போல இதைச் சொல்லிவிட்டு அவள் அப்படியே கண்களை மூடிச் சாய்ந்தாள்.

பழுக்கக் காய்ச்சிய தகட்டின் மீது சம்மட்டியடி விழுவது போல ஆனந்தியின் சொற்கள் அவன் இருதயத்தைத் தாக்கின.

(தொடரும்)

உவகை தரும் கேலிச் சித்திரங்கள்!
உரிமை வேட்கை தரும் கட்டுரைகள்!
இலக்கிய அருமை சொல்லும் சிறு கதைகள்!
சிந்தனைக் கருவூலங்கள் பல நிறைந்தது

முத்தாரம்

மகளிர் கழுத்துக்கு ஒரு முத்தாரம்—
மாந்தர் நெஞ்சுக்கு இந்த இலக்கிய ஆரம்—
என்னும்வகையிலே சிறப்பு பெற்ற
செந்தமிழ் மாத ஏடு .....

முத்தாரம்

ஆசிரியர்: **மு. கருணாநிதி**
ஆகஸ்ட் முதல் வெளிவருகிறது.
விலை அணா 8.

இதுவரை முன் பணம் அனுப்பாத 'முரசொலி' விற்பனையாளர்களுக்கு 'முத்தாரம்' அனுப்பப்படமாட்டாது. எனவே முரசொலி வாசகர்கள் வேறு விற்பனையாளர்களிடம் இதழ் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்!

தி. மு. க.
மாணவர் கிளை

தேர்தல் நிதி அளிப்பு விழா

சென்னை கோகலே மன்றத்தில்
5—8—56
ஞாயிறு காலை 9 மணி யளவில்

அறிஞர் அண்ணா
அவர்கள்
சொற்பொழிவாற்றுவார்கள்

நன்கொடை ரூ. 5, 3, 2.

'முரசொலி', 'நம் நாடு' அலுவலகங்களில் டிக்கட் கிடைக்கும்.

கருணாநிதி
நிகழ்ச்சிகள்.

ஜூலை
.. 26 ஸ்ரீவைகுண்டம்
.. 27 முக்கூடல்
.. 28 களக்காடு
.. 29 ராசபாளையம்
சத்திரப்பட்டி
.. 30 சங்கரகோயில்

இச் சுற்றுப் பயணத்தில் மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்களும் கலந்து கொள்வார்கள்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.